அஷ்டலக்ஷ்மி

# தெனாலிராமன் கதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெனாலிராமனின் வேடிக்கை வினோத கதைகள்

பதிப்பாசிரியர்

**செ.முரளிதரன்**

AL-AMEEN BOOK SHOP
#12, Main Road, Eravur.
Opposite to Co-op Hospital
Mob. 077 180 32 33

**அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்**

**322, செட்டியார் தெரு,**

**கொழும்பு – 11**

**41, கண்டி வீதி கைதடி.**

**தொலைபேசி 2334004**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் தரவு

| | | |
|---|---|---|
| தலைப்பு | - | தெனாலி ராமனின் வேடிக்கை வினோத கதைகள் |
| பதிப்பாசிரியர் | - | செ.முரளிதரன் |
| உரிமை | - | பதிப்பகத்திற்கு |
| முதல் பதிப்பு | - | 01.02.2016 |
| பதிப்பகம் | - | அஷ்டலக்ஷ்மி பதிப்பகம் கைதடி |
| வெளியீடு | - | அஷ்டலக்ஷ்மி புத்தகசாலை, 322, செட்டியார் தெரு, கொழும்பு - 11 . |
| பக்கம் | - | 106 |
| விலை | - | 175/= |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெனாலி இராமனும் கிருஷ்ணதேவராயரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தெனாலி இராமன் பிறந்தான். | 5 |
| 2. | அரசகுருவைச் சந்தித்தல். | 7 |
| 3. | அரசகுரு தோற்றார். | 9 |
| 4. | வித்தைக்காரனை வென்றது! | 11 |
| 5. | முரட்டு மல்லன் ஓட்டம்! | 15 |
| 6. | கடைசி விருப்பம்! | 20 |
| 7. | குதிரை விற்ற பணம். | 24 |
| 8. | குதிரையை ஆற்றில் தள்ளுதல்! | 29 |
| 9. | குதிரை வளர்த்த கதை! | 33 |
| 10. | சூடு கண்ட பூனை! | 37 |
| 11. | ஏற்றம் இறைத்த திருடர்கள்! | 40 |
| 12. | திலகாஷ்ட மகிஷ பந்தனம்! | 44 |
| 13. | கூனை நிமிர்த்த வழி! | 50 |
| 14. | கொல்ல வந்தவர்கள் வெட்டுண்டனர்! | 56 |
| 15. | மரணத்தை வென்றவன்! | 59 |
| 16. | புத்துயிர் பெற்றான்! | 64 |
| 17. | ஆளுக்குப் பாதி! | 65 |
| 18. | சோதிடம் பொய்! | 71 |
| 19. | மற்றவை கற்பனையில்! | 75 |
| 20. | பானைத் தலையன்! | 79 |
| 21. | கிளியின் தெய்வபக்தி | 82 |
| 22. | குதிரை தூக்க முடியாத எடை! | 86 |
| 23. | கத்தரிக்காய் திருடன்! | 88 |
| 24. | மைத்துனனைக் காப்பாற்றுதல்! | 93 |
| 25. | டில்லியில் தெனாலி இராமன்! | 96 |
| 26. | “அரசர்களை நம்பாதே” | 101 |
| 27. | தெனாலி இராமனின் முடிவு! | 105 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. தெனாலி இராமன் பிறந்தான்

**ஆ**ந்திர நாட்டைச் சேர்ந்த கிருஷ்ணா மாவட்டத்தில் கர்லபாடு என்றொரு கிராமம். அக்கிராமத்தில் ஈசுவர பிரசாத் இராமய்யா என்று ஓர் அந்தணர் இருந்தார்.

இவரைக் கிராமத்தில் உள்ளவர்கள் இராமய்யா என்றே அழைப்பார்கள். இவருடைய மனைவியாரின் பெயர் இலட்சுமி, இலட்சுமி தெனாலி என்ற ஊரைச் சேர்ந்தவள்.

திருமணமாகி நீண்ட நாட்களாகியும் இருவருக்கும் குழந்தைப் பேறு இல்லை. இலட்சுமி போகாத கோயில் கிடையாது. செய்யாத பிரார்த்தனை கிடையாது.

இலட்சுமி பிறந்த ஊரான தெனாலியில் இராமலிங்கேசுவரர் கோயில் பிரசித்தி பெற்றது. அக்கோயிலுக்கு வந்து பலர் தங்கள் பிரார்த்தனைகளை நிறைவேற்றி விட்டுப் போனதை சிறுவயதில் இலட்சுமி பார்த்திருக்கிறாள். முடிவில் அவளும் தம் ஊரில் குடிகொண்டிருக்கும் இராமலிங்கேசுவரரிடம் பிரார்த்தனை செய்து கொண்டாள்.

அவர் அருளால் தனக்கு ஒரு குழந்தை பிறந்தால் அவருடைய பெயரையே குழந்தைக்கு வைப்பதாக பிரார்த்தனை செய்துகொண்டாள்.

சில மாதங்கள் சென்றன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்சுமி கருவுற்றாள், இராமலிங்கேசுவரரின் அருளை எண்ணி வியந்தாள்.

அவளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்குத் தான் வேண்டிக் கொண்டவாறே, "இராமலிங்கன்" என்று பெயரிட்டாள்.

குழந்தை பிறந்து மூன்றாவது நாள் இராமய்யாவுக்குக் கொலரா வந்தது. எவ்வளவோ வைத்தியம் பார்த்தும் இராமய்யா பிழைக்கவில்லை.

இராமய்யா இறந்தது 'குழந்தை பிறந்த வேளை' என்று எல்லோரும் குழந்தையை ஏசினர்.

ஆனால், குழந்தை இராமலிங்கனோ யார் பேச்சையும் பொருட்படுத்தாமல் சிரித்துக் கொண்டிருந்தான்.

ஆதரவு அற்று விடப்பட்ட இலட்சுமி குழந்தையை எடுத்துக் கொண்டு தன் தாய் வீட்டுக்கே வந்துவிட்டாள்.

குழந்தை இராமலிங்கன் இளமைப் பருவம் முழுவதும் தெனாலியிலுள்ள தன் தாய் மாமன் வீட்டிலேயே வளர்ந்தான்.

இளமைப் பருவத்தில் அவனை எல்லோரும் இராமன் என்றே கூப்பிட்டதாலும், இளமைப் பருவம் முழுவதும் அவன் தெனாலியிலேயே இருந்ததாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்காலத்தில் அவனை எல்லோரும் தெனாலி இராமன் என்றே அழைத்தார்கள்.

இளமைப் பருவத்திலேயே இராமன் புத்திக் கூர்மையுள்ளவனாகவும் நகைச்சுவையுடன் பேசுவதில் வல்லவனாகவும் இருந்தான்.

இராமனின் பதினைந்தாவது வயதில் அவனை ஆதரித்து வந்த அவனது தாய் மாமனும் காலமாகி விட்டார்.

குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இராமனின் தலைமீது விழுந்தது.

பல இடங்களில் வேலை தேடி அலைந்தான். எங்கும் அவனுக்கு வேலை கிடைக்கவில்லை.

"இராமா, உன்னுடைய திறமையையும் அறிவுக் கூர்மையையும் அறிந்தால் விஜயநகர மன்னர் உன்னை விடமாட்டார். நீ இங்கிருந்து துன்பப்படுவதை விட விஜயநகரம் சென்றால் செல்வாக்குடன் வாழலாம்" என்று பலர் அவனுக்கு அறிவுரைகள் கூறினர், அதன்படி இராமனும் விஜயநகரம் நோக்கிச் சென்றான்.

## 2. அரச குருவைச் சந்தித்தல்

**கி**ருஷ்ண தேவராயரிடம் தாத்தாச்சாரி என்ற பண்டிதர் ஒருவர் பெரும் செல்வாக்குடன் விளங்கி வந்தார். இவரே அவருக்கு அரசகுருவாக இருந்தார். தாத்தாச்சாரியாரின் சொல்லை அரசர் ஒருபோதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டமாட்டார் என்பதை விஜயநகரம் வந்ததும் தெரிந்து கொண்டான், இராமன்.

அவரிடம் சென்று தன் நிலையைக் கூறினான்.

"ஐயா, எங்கள் குடும்பம் ஆதரவற்ற நிலையில் உள்ளது. நான் வேலை செய்துதான் என் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும். நீங்கள் அரசரிடம் சொல்லி எனக்கொரு வேலை வாங்கிக் கொடுத்தால் உபகாரமாக இருக்கும்" என்றான் இராமன்.

தாத்தாச்சாரி மிகுந்த அகம்பாவம் கொண்டவர். சிறிது கூட இரக்க குணம் இல்லாதவர்.

இராமன் சொன்னதைக் கேட்ட அவர் தன் வேலையாளைக் கூப்பிட்டுக் கடிந்து கொண்டார்.

"இந்த மாதிரியான முட்டாள்களையெல்லாம் ஏன் உள்ளே விட்டாய்" என்று கோபமாகக் கேட்ட தாத்தாச்சாரி, "முதலில் இவன் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளு" என்றார்.

தெனாலி இராமன், வேலையாள் வந்து கழுத்தைப் பிடித்துத் தள்ளும் வரையில் நிற்காமல். தானாகவே வெளியே வந்துவிட்டான்.

தாத்தாச்சாரியாரின் செய்கை அவனுக்கு மிகுந்த ஆத்திரத்தை உண்டாக்கிவிட்டது. அவருக்குத் தக்க பாடம் புகட்ட வேண்டுமென்று தீர்மானித்தான். "என்னையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டாள் என்று கூறினீர்? அரசர் முன்னிலையில் உம்மையே முட்டாளாக்கிக் காட்டுகிறேன்" என்று சபதம் செய்தவாறு அவ்விடத்தை விட்டு சென்றான் தெனாலி ராமன்.

## 3. அரச குரு தோற்றார்!

**ம**றுநாள் தெனாலி இராமன் அரண்மனைக்குச் சென்றான். வாயில் காப்போர் அவனை உள்ளே விட மறுத்தனர். அவர்களிடம் "நான் அரசகுரு தாத்தாச்சாரியாரின் சீடன். அவரிடம் ஓர் அவசரச் செய்தி சொல்ல வேண்டியிருக்கிறது. உள்ளே போக வேண்டும்" என்றான்.

தாத்தாச்சாரி அரசரிடம் மிக்க செல்வாக்குள்ளவர் என்று வாயில் காவலர்களுக்குத் தெரியும். தெனாலி இராமனை உள்ளே விட மறுத்தால் பிறகு தாத்தாச்சாரியார் மூலமாகத் தங்கள் வேலைக்கு ஆபத்து வருமோ என்று பயப்பட்டனர்.

மறுபேச்சுப் பேசாமல் தெனாலி இராமனை உள்ளே விட்டுவிட்டனர் வாயில் காவலர்.

தெனாலி இராமன் சபைக்குச் சென்றபோது சபையில் ஏதோ வாதம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. தாத்தாச்சாரியார்தான் வாதத்தில் முக்கிய பங்கேற்றுக் கொண்டிருந்தார். அந்த வாதம் முடிந்ததும் சபையோர்க்கு ஒரு பெரிய விருந்து படைக்கப்பட இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாத்தாச்சாரியார் உணர்ச்சி பொங்கப் பேசிக் கொண்டிருந்தார்.

"எல்லாம் மாயை. நம்மால்தான் எல்லாம் நடக்கின்றன என்று நாம் நினைப்பதே மாயை. எதையுமே நாம் செய்வதில்லை. ஒவ்வொரு காரியத்தையும் நாம் செய்வதாக நினைத்துக் கொள்கிறோம். அவ்வளவுதான்!" என்றார் தாத்தாச்சாரியார்.

உடனே தெனாலி இராமன், "ஐயா நாம் செய்வதற்கும், செய்வதாக நினைத்துக் கொள்வதற்கும் வித்தியாசம் இல்லையா?" என்று அரச குருவைப் பார்த்துக் கேட்டான்.

தெனாலி இராமனைப் பார்த்ததும் அரச குருவுக்கு ஆத்திரம் வந்தது. "அத்துமீறி நுழைந்ததுமல்லாமல் அதிகப் பிரசங்கித்தனமாக நம்மைக் கேள்வி கேட்கிறானே!" என்று நினைத்தார்.

குருவே, நானே உங்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்கலாமென்று நினைத்தேன். இந்தச் சிறுவன் என்னை முந்திக் கொண்டான். இந்தக் கேள்விக்கு உங்கள் பதில் என்ன? என்று தாத்தாச்சாரியாரைப் பார்த்து கேட்டார் இராயர்.

தாத்தாச்சாரியார் தெனாலி இராமன் பேரிலிருந்த கோபத்தை அடக்கிக் கொண்டு "இல்லை அரசே! இரண்டுக்கும் வித்தியாசம் இல்லை. எந்தச் செயலையும் நாம் செய்வதில்லை. நாம் அவற்றைச் செய்வதாக நினைத்துக் கொள்கிறோம்" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியானால் ஒன்று செய்யலாம். சற்று நேரத் தில் தாங்கள் அளிக்கப்போகும் விருந்தை நாம் எல்லோரும் சாப்பிட்டு மகிழலாம். இவர் மட்டும் தாம் சாப்பிட்டதாக நினைத்துக் கொள்ளட்டும்" என்று இராயரைப் பார்த்துக் கூறினான் தெனாலி இராமன்.

தெனாலி இராமனின் பதிலைக் கேட்டதும் தாத்தாச் சாரியார் தலை கவிழ்ந்து கொண்டார். இராயர் தெனாலி இராமனை மெச்சி அவனுக்குப் பல பரிசுகள் அளித்துப் பாராட்டினார்.

## 4. வித்தைக்காரனை வென்றது!


ஒரு சமயம் வடநாட்டிலிருந்து ஒரு பெரிய வித்தைக்காரன் இராயரின் சபைக்கு வந்திருந்தான். பல செப்பிடு வித்தைகளைச் செய்து காட்டினான். எல்லோரும் அவன் வித்தைகளைப் பார்த்து அவனை வியந்து பாராட்டினர்.

வித்தைகள் முடிந்ததும் செப்பிடு வித்தைக்காரன் "என்னைப் போல் வித்தையில் வல்லவர் எவரும் இல்லை. ஆயிரக்கணக்கான பொன் பரிசளித்தாலும் என்போல் எவரும் வித்தைகள் காட்ட முடியாது" என்றான்.

அப்போது சபையில் தெனாலி இராமன் இருந்தான். அவனுக்கு வித்தைக்காரனின் பேச்சு ஆத்திரத்தை உண்டாக்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இவ்வளவு அகந்தையுடன் பேசுகிற இவன் கர்வத்தை அடக்க வேண்டும்' என்று தீர்மானித்தவனாய், "நான் கண்களை மூடிக்கொண்டு செய்யும் செயலை உன்னால் கண்களைத் திறந்தபடியே செய்ய முடியுமா?" என்று கேட்டான்.

இது என்ன பிரமாதம்! கண்களை மூடிக்கொண்டே எத்தனையோ வித்தைகள் செய்திருக்கிற எனக்கு, கண்களைத் திறந்தபடியே செய்ய முடியாதா? என்ன செய்ய வேண்டும்? சொல் சீக்கிரம் என்றான் வித்தைக்காரன்.

ஒரு நிபந்தனை! இப்பந்தயத்தில், நீ தோற்றால் அரசர் உனக்கு அளிக்கப்போகும் வெகுமதியை எனக்கு நீ அளித்துவிட வேண்டும். இதற்கு சம்மதமா? என்றான் தெனாலி இராமன்.

நீ தோற்றால்? என்று தெனாலி இராமனைப் பார்த்துக் கேட்டான் வித்தைக்காரன்.

"என் ஆயுட்காலம் முழுவதும் உன்னிடம் அடிமையாக இருக்கிறேன்" என்றான், தெனாலி இராமன்.

"சரி, ஒப்புக் கொள்கிறேன். சொல், என்ன செய்யவேண்டுமென்று" எனறு தெனாலி இராமனைப் பார்த்துக் கேட்டான்.

தெனாலி இராமனின் பேச்சைக் கேட்டதும் இராயர் மகிழ்ந்து போனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேரம் வெளியே செல்ல வேண்டும். சென்று வந்தபின் நீ என்ன செய்யவேண்டுமென்று சொல்கிறேன் என்றான் தெனாலி இராமன்.

இந்தப் பொடிப்பயல் அப்படி என்னதான் செய்துவிடப் போகிறான். பார்ப்போம்! என்று இறுமாப்புடன் இருந்தான் வித்தைக்காரன்.

வெளியே சென்று திரும்பிய இராமன், வித்தைக் காரனிடம் "நான் முன்னர் சொன்னபடி நான் கண்களை மூடிக் கொண்டு செய்யும் அதே வித்தையை நீ கண்களைத் திறந்து கொண்டே செய்து காட்ட வேண்டும்" என்றார்.

"ஏன், சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லு கிறாய்? முதலில் உன் வித்தையைச் செய்து காட்டு. அதற்குப் பிறகு ஒருபடி மேலாகவே நான் அதே வித் தையைச் செய்து காட்டுகிறேன்" என்றான் வித்தைக்காரன்.

உடனே தெனாலி இராமன் தன் மடியிலிருந்து ஒரு பொட்டலத்தை எடுத்தான். இரண்டு கண்களையும் மூடியவாறே பொட்டலத்தை திறந்தான். அதற்குள் சிறிது மணல் இருந்தது. அதை அப்படியே மூடியிருந்த தன் கண்களின் மேல் கொட்டிக் கொண்டான்.

சிறிது நேரம் சென்றபின் கண்களின் மேலிருந்த மணலைத் தள்ளிவிட்ட வித்தைக்காரனிடம் மற்றொரு பொட்டலத்தை கொடுத்தான் இராமன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலும் மணல் இருந்தது!

“இப்பொழுது நான் கண்களை மூடிக்கொண்டு செய்த இதே வித்தையை நீ கண்களைத் திறந்தவாறே செய்துகாட்டு” என்றான், இராமன்.

இதைக் கேட்ட வித்தைக்காரன் தான் தோற்று விட்டதை உணர்ந்தான்.

“அரசே, இவரைச் சாதாரணமானவராக நினைத்து விட்டேன். என் அகந்தை அழிந்தது! எனக்குத் தரவேண்டிய சன்மானத் தொகையை இவருக்கே கொடுத்து விடுங்கள்” என்றான் வித்தைக்காரன்.

“உங்கள் பந்தயம் ஒருபுறம் இருக்கட்டும். நீ செய்த வித்தைகளுக்கு நான் தரும் சன்மானத்தைப் பெற்றுக் கொள். அதே சமயம் இராமன் செய்த வித்தைக்கும் தனியாகச் சன்மானம் தருவோம்” என்றார் இராயர்.

## 5. முரட்டு மல்லன் ஓட்டம்

**வி**த்தைக்காரனிடம் இராமனின் புத்திக் கூர்மையைக் கண்டு வியந்த இராயர் அவனை அரசவை விகடகவியாக அமர்த்திக் கொண்டார். ஒருமுறை டில்லியிலிருந்து ஒரு முரட்டு மல்லன் விஜயநகரம் வந்தான். நேரே இராயரின் அவைக்குப் போனான்.

“அரசே என்னை வெல்லக் கூடியவர் எவராவது உங்கள் நாட்டிலிருந்தால் என்னுடன் மற்போர் புரிய அனுப் புங்கள்” என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லனின் பேச்சைக் கேட்ட இராயர் அரண்மனை மல்லர்களிடம் கூறினார். முரட்டு மல்லனின் தோற்றத்தைப் பார்த்து அரண்மனை மல்லர்கள் ஓடி ஒளிந்து கொண்டனர்.

இது இராயருக்குத் தெரிய வந்ததும் அவருக்குக் கோபம் வந்துவிட்டது.

"இந்த மல்லனை வெல்லக் கூடியவர் எவரும் நம் சபையில் இல்லையா? இவனை வெல்பவர் எவராயிருந் தாலும் அவர்களுக்கு ஆயிரம் பொன் பரிசளிக்கிறேன்" என்றார் இராயர்.

இராயரின் பேச்சைக் கேட்டதும் தெனாலி இராமன் தன் ஆசனத்திலிருந்து எழுந்தான்.

"அரசே இந்த மல்லனுடன் நான் போரிடுகிறேன்" என்றான், இராமன்.

தெனாலி இராமனின் பேச்சு இராயருக்கு வியப்பை அளித்தது.

மற்போர் வீரன் தெனாலி இராமனை ஏற இறங்க அலட்சியத்துடன் பார்த்தான்.

"மல்யுத்தம் என்பது முரட்டுத்தனமாக சண்டை யிடுவது என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய் போலிருக் கிறது. மல்யுத்த சாஸ்திரத்தில் மலைபோன்ற பயில்வானை யும் மண்ணைக் கவ்வச் செய்யும் வழிமுறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்பட்டிருக்கின்றன. நான் நோஞ்சானாயிருக்கிறேனே யென்று சாதாரணமாக நினைத்து விடாதே! நான் சீனநாட்டு வீரன் ஒருவனிடம் இந்தக் கலையைக் கற்றுக் கொண்டி ருக்கிறேன். முடியுமானால் நீயும் அந்த முறைப்படி என்னு டன் மல்யுத்தம் செய்யலாம்" என்றான் இராமன்.

"மல்யுத்த சாஸ்திரம் என்கிறான். சீனநாட்டு வீரன் என்கிறான்" மல்யுத்த வீரனுக்கு ஒன்றும் புரியவில்லை.

இதை வெளியில் காட்டாமல் இராமனுடன் மல் யுத்தம் செய்ய ஒப்புக் கொண்டான்.

முரட்டு மல்லன் எதிரே வந்ததும் இராமன் அவன் எதிரே சென்றான். அவனுடைய கைவிரல்களை மடக்கி முஷ்டியாக்கினான். பின்னர் அந்த முஷ்டியினால் தன் மார்பில் குத்திக் கொண்டான்.

அதன் பிறகு தன்னுடைய இரண்டு கைகளையும் தோள்வரை விரித்துக் காண்பித்தான்.

பின்னர் இடது கையின் ஆள்காட்டி விரலால் கழுத்தைச் சுற்றியவாறு வலது கையால் இடுப்பு உயரத்தில் கவிழ்த்துக் காண்பித்தான்.

அதன் பின்னர் அவனுடைய ஒரு கையை ஆட்டிக் காண்பித்து, "மல்யுத்த சாத்திரத்தில் கூறப்பட்டுள்ள இந்த சங்கேதங்களுக்கு என்ன பதில்?" என்று முரட்டு மல்லனிடம் கேட்டான் இராமன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரட்டு மல்லனுக்கு ஒன்றும் புரியவில்லை. மறு நாள் வந்து கூறுவதாகச் சென்றவன் இரகசியமாக ஒருவரும் அறியாமல் டில்லிக்குச் சென்று விட்டான்.

முரட்டு மல்லன் ஓடிப்போய் விட்டான் என்பதை அறிந்துகொண்ட இராயர் மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

“இராமா, மல்யுத்த சாஸ்திரப்படி நீ செய்த சங்கே தங்களுக்கு என்ன பொருள்?” என்று இராமனிடம் கேட்டார் இராயர்.

“அரசே! அது ஒன்றும் பிரமாதமானதல்ல, நான் உன்னிடம் மல்யுத்தம் செய்ய நேர்ந்தால், நீ உன் முஷ்டி யினால் என் மார்பில் குத்துவாய். உன் குத்துப்பட்டதும் இரண்டு கைகளையும் விரித்துக் கொண்டு கழுத்து நொறுங்கி கீழே விழுந்து நான் இறந்து விடுவேன். அப்படி நான் இறந்து விட்டால் என் மனைவி மக்களை யார் காப் பாற்றுவார்கள் என்பது தான் இதற்குப் பொருள் என்றான் இராமன்.

இதைக் கேட்ட இராயரும் சபையினரும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

இராயர் தாம் முன்னர் அறிவித்தவாறு இராமனுக்கு ஆயிரம் பொன் பரிசாக அளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. கடைசி விருப்பம்

**இ**ராயருக்கு அவர் தாயின்மேல் மிகுந்த பிரியம். தாயார் இறந்த நாளினை விமரிசையாகக் கொண்டாட வேண்டுமென்று நினைத்தார்.

அரசகுரு தாத்தாச்சாரியாரைக் கூப்பிட்டு அவருடன் ஆலோசித்தார்.

"அரசே இறந்து போனவர்களின் கடைசி விருப்பம் ஏதாவது நிறைவேறாது போனால், அவர்கள் விருப்பப்பட்ட பொருளை நூற்றி எட்டுப் புரோகிதர்களுக்குத் தானமாக வழங்கலாம். இவ்வாறு தானம் வழங்கினால் இறந்தவர் களது ஆன்மா சாந்தியடையும்" என்றார், தாத்தாச்சாரியார்.


என்னுடைய தாயார் இறக்கும்போது மாம்பழம் சாப்பிட வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். மாம்பழம் கொண்டு வருவதற்குள் இறந்து விட்டார்கள். அவர் களுடைய கடைசி ஆசை நிறைவேறவே இல்லை என்றார் இராயர்.

உங்கள் தாயாரின் நினைவு நாளன்று நூற்றி எட்டுப் புரோகிதர்களுக்குத் தங்கத்தினால் செய்த மாம்பழத்தைத் தானமாக வழங்கினால் உங்கள் தாயாரின் ஆன்மா சாந்தியடையும், என்றார் தாத்தாச்சாரியார்.

அப்படியே செய்துவிடுவோம்! என்றார், இராயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச குருவுக்கு எவ்வளவு பேராசை பாருங்கள்! மாம்பழத்துக்கு ஈடாக மாம்பழம் கேட்டிருக்கலாம். தங்க மாம்பழம் வேண்டுமாமே!

தாத்தாச்சாரியார் கூறியதைத் தெனாலி இராமன் கேட்டுக் கொண்டிருந்தான். அவருடைய பேராசை குணத்திற்குத் தக்க பாடம் புகட்ட வேண்டுமென்று நினைத்தான்.

மறுநாள் தாத்தாச்சாரியாரிடம் சென்றான். ஐயா, என்னுடைய தாயாரின் நினைவு நாள் வருகிறது. அன்றைய தினம் என் தாயாரின் கடைசி விருப்பத்தை நிறைவேற்றலாம் என்று நினைக்கிறேன். அன்றைய தினம் நூற்றி எட்டுப் புரோகிதர்களுக்குத் தானம் வழங்கலாமென்று நினைக்கிறேன் என்றான், இராமன்.

என்றைக்கு உன்னுடைய தாயாரின் நினைவு நாள்? என்றார் தாத்தாச்சாரியார்.

"நாளைய தினம்!" என்றான், இராமன்.

பரவாயில்லை! நாளை மறுநாள் அரண்மனையில் நம் அரசருடைய தாயாரின் நினைவுநாள், நாளைய தினம் நான் நூற்றெட்டுப் புரோகிதர்களுடன் உன் வீட்டிற்கு வந்துவிடுகிறேன் என்றார் தாத்தாச்சாரியார்.

இராமன் இராயரிடம் அடைந்துள்ள செல்வாக்கை எண்ணி, அவனுடன் விரோதித்துக் கொள்ள வேண்டாமென்று நினைத்தார். எனவே தான் அவன் வீட்டுக்கு வருவதாக ஒப்புக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் தெனாலி இராமன் வீட்டில் தாத்தாச்சாரி யார் தலைமையில் நூற்றி எட்டுப் புரோகிதர்கள் தானம் வாங்குவதற்காகக் காத்திருந்தனர்.

இராமன் ஒவ்வொருவராக உள்ளே வரவழைத்தான். அவர்கள் கையில் நெருப்பில் காய்ச்சிய சூட்டுக் கோலி னால் சூடு போட்டான்.

எல்லோரும் அலறியடித்துக் கொண்டு ஓடினர். இராமன் தாத்தாச்சாரியாரையும் விடவில்லை. அவர் கையி லும் சூடு போட்டுவிட்டான்.

தாத்தாச்சாரியார் அரண்மனைக்குச் சென்று இராயரிடம் முறையிட்டார்.

இராயர் இராமனை வரவழைத்தார்.

"இராமா, இது என்ன விளையாட்டு? உன் வீட்டுக்குத் தானம் வாங்க வந்தவர்களுக்கு கையில் சூடு போட்டு அனுப்பினாயாமே!" என்றார் இராயர்.

அரசே, என்னுடைய தாயார் இறக்கும் தறுவாயில் நோய் உபாதை பொறுக்க முடியாமல் தன் கையில் சூடு போடும்படி கேட்டுக் கொண்டார்கள். சூட்டுக்கோலை நெருப்பில் காய்ச்சி எடுத்து வருவதற்குள் என் தாயார் இறந்துவிட்டார்கள். அதனால்தான் அவருடைய நிறை வேறாத ஆசையை நிறைவேற்றினேன் என்றான், இராமன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரசே என்னை மன்னித்து விடுங்கள்! இராமன் இவ்வாறு செய்வான் என்று தெரிந்திருந்தால் தங்க மாம்பழங்கள் தானமாகத் தரவேண்டும் என்று நான் உங்களிடம் சொல்லியிருக்க மாட்டேன். எங்களுக்குத் தானமும் வேண்டாம். தங்க மாம்பழமும் வேண்டாம்" என்றார் தாத்தாச்சாரியார்.

இராமனின் புத்தி சாதுரியத்தினால் தங்கமாம்பழ தானம் நிறுத்தப்பட்டது. அதற்குப் பதிலாக ஏழைய எளியவர் களுக்கெல்லாம் உண்மையான மாம்பழங்களே தான மாகத் தரப்பட்டன.

# 7. குதிரை விற்ற பணம்


**தெ**னாலி இராமன் தன் தாயாரின் நினைவு நாளன்று தன்னை அவமானப்படுத்தியதைத் தாத்தாச்சாரியார் மறக்கவில்லை. எப்படியாவது அவனைப் பழிவாங்க வேண்டுமென்று நினைத்தார். அதற்கு ஒரு சந்தர்ப்பமும் வந்தது.

இராமனுக்குத் திடீரென்று நோய் கண்டது. படுத்த படுக்கையாக ஆகிவிட்டான். இராமனின் மனைவி எவ்வளவோ வைத்தியங்கள் செய்து பார்த்து விட்டாள். ஒன்றிலும் பயன் ஏற்படவில்லை.

"நம் அரசகுரு தாத்தாச்சாரியாருக்கு மந்திர தந்திரங்களெல்லாம் தெரியும். ஏதாவது தோஷம் இருந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மந்திரத்தால் குணமாகிவிடும்” என்று சிலர் இராம னின் மனைவியிடம் கூறினர்.

இராமனின் மனைவியும் தன் கணவனைக் காப் பாற்ற தாத்தாச்சாரியாரின் வீட்டுக்கு இராமனை அழைத்துச் சென்றாள்.

இராமனைப் பார்த்த தாத்தாச்சாரியார், இராமன் அன்றைய தினம் நூற்றி எட்டு பிராமணர்களுக்குச் சூடு போட்டான் அல்லவா? அந்தத் தோஷம்தான் அவனைப் பிடித்திருக்கிறது. தோஷ நிவர்த்தி செய்தால் நோய் தீர்ந்து குணமாகிவிடும் என்றார்.

நீங்கள் தான் எப்படியாவது என் கணவரைக் காப்பாற்ற வேண்டும் என்று தாத்தாச்சாரியாரிடம் கேட்டுக் கொண்டாள் இராமனின் மனைவி.

“தோஷ நிவர்த்தி செய்ய இருநூறு பொன் காணிக்கை தரவேண்டும்!” என்றார் தாத்தாச்சாரியார்.

இப்பொழுது எங்களிடம் செப்புக்காசுகூடக் கிடை யாது ஸ்வாமி. நீங்கள் எப்படியாவது தோஷ நிவர்த்தி செய்து என் கணவரைக் காப்பாற்றி விடுங்கள். என் கணவரின் நோய் குணமானதும் எங்களிடம் இருக்கும் குதிரையை விற்று உங்களுக்கு இருநூறு பொன் கொடுத்து விடுகிறோம்” என்றாள் இராமனின் மனைவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாத்தாச்சாரியாரும் இதற்கு ஒப்புக் கொண்டார். ஏனெனில் தெனாலி இராமனிடம் ஒரு குதிரை இருப்பது அவருக்குத் தெரியும். அது இருநூறு பொன்களுக்கு மேலாகவே மதிப்பு இருக்குமென்று அவருக்குத் தெரியும்.

தாத்தாச்சாரியார் என்ன செய்தாரோ தெரிய வில்லை. ஒரு வாரத்திற்கெல்லாம் இராமன் நோய் நீங்கிப் பூரண குணமாகிவிட்டான்.

இராமன் பூரண குணமாகி விட்டான் என்பதை அறிந்த தத்தாச்சாரியார் இராமனின் வீட்டுக்கு ஒருநாள் வந்தார்.

உன் நோய் குணமாகிவிட்டதல்லவா? என்னிடம் சொன்ன மாதிரி உன் குதிரையை விற்று எனக்கு இருநூறு பொன்களைக் கொடுத்துவிடு என்றார் தாத்தாச்சாரியார்.

"நாளைய தினம் என் வீட்டுக்கு வாருங்கள். இருவரு மாகச் சேர்ந்து சந்தைக்குப் போவோம். அங்கு என் குதிரையை விற்று அதற்குக் கிடைக்கும் பணத்தை அப்படியே உங்களிடம் கொடுத்து விடுகிறேன்" என்றான் இராமன்.

குதிரையோ இருநூறு பொன்களுக்கு மேல் பெறும். இராமனோ குதிரை விற்று அந்தப் பணத்தை அப்படியே கொடுத்து விடுவதாகச் சொல்கிறான்.

ஆசை யாரை விட்டது? தாத்தாச்சாரியாரும் இதற்கு ஒப்புக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் தாத்தாச்சாரியார் இராமனின் வீட்டுக்கு வந்தார். இராமன் கொட்டிலிலிருந்த குதிரையை அவிழ்த்துக் கொண்டு தாத்தாச்சாரியாருடன் சென்றான்.

வழியில் ஒரு பூனைக்குட்டி ஒரு மரத்தடியில் தூங்கிக் கொண்டிருந்தது.

தெனாலிராமன் அதனையும் தூக்கிக் கொண்டான்.

இதை என் எடுத்து வருகிறாய்? என்று கேட்டார் தாத்தாச்சாரியார்.

"இதுவும் பயன்படும்!" என்று கூறிய இராமன் சந்தைக்கு வந்து சேர்ந்தான். இராமனுடைய குதிரை நன்றாக இருந்ததால் பலர் அதனை விலைக்குக் கேட்டனர்.

இராமன் "குதிரையின் விலை ஒரு பொன்!" என்றான்.

இதைக் கேட்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டனர்.

"குதிரையின் விலை ஒரு பொன்னா? இருநூறு பொன்னுக்கு மேல் மதிப்புப் பெறுமே! என்று நினைத்த பலர் உடனே ஒரு பொன்னை எடுத்துக் கொடுத்துக் குதிரையைக் கேட்டனர்.

"அவசரப்படாதீர்கள்! குதிரையின் விலை ஒரு பொன். ஆனால், இந்தப் பூனையின் விலை இருநூறு பொன். இரண்டையும் சேர்த்துத்தான் விற்பேன். தனித் தனியாக விற்க முடியாது" என்றான் இராமன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைக் கேட்டதும் ஆர்வத்துடன் வந்தவர்களில் பெரும்பாலானோர் நழுவி விட்டனர். முடிவில் ஒருவன் இருநூற்றி ஒரு பொன் கொடுத்து இராமனிடமிருந்து குதிரையையும், பூனையையும் வாங்கிக் கொண்டான்.

உடனே இராமன் ஒரு பொன்னைத் தாத்தாச்சாரியாரிடம் கொடுத்து குதிரை விற்ற பணத்தை உங்களுக்குக் கொடுத்துவிட்டேன். இப்பொழுது சரிதானே! என்று சொல்லிவிட்டு இருநூறு பொற்காசுகளுடன் கம்பீரமாக நடந்தான்.

தாத்தாச்சாரியரோ அவன் போன திசையையே ஏமாற்றத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

## 8. குதிரையை ஆற்றில் தள்ளுதல்!


**தா**த்தாச்சாரியாக்குத் தரவேண்டிய பணத்திற்காகக் குதிரையை விற்ற இராமன், மீண்டும் தனக்கொரு குதிரையை வாங்க விரும்பினான்.

சந்தையில் போய் விசாரித்தபோது அவனிடமுள்ள இருநூறு பொற்காசுக்கு மேலாகவே விலை சொன்னார்கள். தெனாலி இராமன் சந்தையில் சுற்றிப் பார்த்துவிட்டு ஐம்பது பொன் கொடுத்து ஒரு நோஞ்சான் குதிரையை வாங்கிக் கொண்டான்.

வீட்டுக்குக் கொண்டுபோய் நல்ல தீனி கொடுத்தால் இதுவும் நன்றாகக் கொழுத்துவிடும் என்று எண்ணியபடியே குதிரையை வீட்டுக்கு ஓட்டி வந்தான், இராமன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோஞ்சான் குதிரைக்குக் கொள்ளும் புல்லும் போட்டான். குதிரை சரிவர சாப்பிடவே இல்லை. இவ்வாறு இருந்தால் என்ன லாபம்? இது வேறு செத்துத் தொலைத் தால் இதனை அடக்கம் செய்யத் தண்டச் செலவு ஆகிவிடும் என்று நினைத்த இராமன் அதனை விற்றுவிட முடிவு செய்தான். ஒருவரும் அதனை விலைக்கு வாங்க முன்வரவில்லை.

ஒருநாள் தெனாலி இராமன் இந்த நோஞ்சான் குதிரையின் மேல் ஏறிக்கொண்டு அரண்மனைக்குச் சென்றான்.

அப்போது இராயரும் உன்னதமான ஓர் அரபுக் குதிரையின் மீதமர்ந்து வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

தெனாலி இராமனும் அவருடைய குதிரைக்குச் சமமாக தன்னுடைய குதிரையை ஓட்டிவர முயன்றான்.

இதைப் பார்த்த இராயர் சிரித்தபடி, "இராமா, உன்னுடைய நோஞ்சான் குதிரையை என் குதிரைக்குச் சமமாக ஓட்டிவர நினைக்கிறாயே? முடியுமா, உன்னால்?" என்றார்.

"என்ன அப்படிச் சொல்லிவிட்டீர்கள்! தங்களுடைய குதிரையைக் கொண்டு தாங்கள் செய்ய முடியாத காரியத்தை என் குதிரையைக் கொண்டு நான் செய்து காட்டுவேன் அரசே!" என்றான் இராமன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதேமாதிரி நீ செய்து காட்டினால் உனக்கு நூறு பொன் பரிசாக அளிக்கிறேன்" என்றார் இராயர்.

அப்பொழுது இருவரும் ஓர் ஆற்றுப் பாலத்தின் மீது சென்று கொண்டிருந்தனர்.

உடனே இராமன் தன் குதிரையிலிருந்து இறங்கினான். சட்டென்று தன்னுடைய நோஞ்சான் குதிரையை ஆற்றில் தள்ளிவிட்டான்.

நோஞ்சான் குதிரை ஆற்று வெள்ளத்தில் அடித்து கொண்டு போய்விட்டது.

"இதைப்போல உங்கள் குதிரையைச் செய்து காட்டுங்கள் பார்க்கலாம்" என்று இராயரைப் பார்த்துக் கூறினான் இராமன்.

இராமன் சொல்படி நடந்து தம்முடைய ஆயிரம் பொன் மதிப்புள்ள அருமையான குதிரையை இழக்க இராயர் விரும்பவில்லை.

இராமா நான் தோற்று விட்டேன். ஆயினும் இதற்காக உன் குதிரையை நீ இழக்கலாமா? என்று கேட்டார் இராயர்.

விலைபோகாத குதிரையை வைத்துக் கொண்டு என்ன இலாபம் அரசே? மேலும், அது நோய்வாய்ப்பட்டு பாதி உயிருடன் துடித்துக் கொண்டிருக்கிறது. அதனுடைய துன்பத்தை ஒரு நொடியில் குறைத்து விட்டேன். எனக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை வாங்கிய விலைக்குமேல் ஒரு பங்கு கூடுதலான தொகை கிடைத்து விட்டது இதையெல்லாம். பார்க்கும் பொழுது என்னுடைய குதிரையை நான் இழந்தது எனக்குப் பெரிய இலாபமேயாகும் என்றான் இராமன்.

அவனுடைய புத்திசாலித்தனத்தைப் பெரிதும் வியந்து பாராட்டினார் இராயர்.

## 9. குதிரை வளர்த்த கதை!

கிருஷ்ண தேவராயர் தன்னுடைய குதிரைப் படையைப் பெருக்கத் திட்டமிட்டார். இதற்காக அரேபியாவிலிருந்து ஆயிரம் குதிரைக் குட்டிகளை வரவழைத்தார். ஆயிரம் குதிரைக் குட்டிகளையும் குறைந்த செலவில் வளர்க்க வேண்டுமென்று நினைத்தார் இராயர்.

பட்டணத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்தாரிடமும் ஒரு குதிரைக் குட்டியைக் கொடுத்து அவர்களை வளர்த்துக் கொண்டுவரச் சொன்னார் இராயர். இதற்காக ஒவ்வொரு குதிரைக்கும் நாளொன்றுக்கு மூன்று வராகன்கள் அரண்மனையிலிருந்து கொடுக்கச் சொன்னார்.

தெனாலி இராமனிடமும் ஒரு குதிரைக் குட்டி கொடுக்கப்பட்டது.

தெனாலி இராமன் குதிரைக் குட்டியை ஒரு கொட்டி லில் கட்டினான். கொட்டிலைச் சுற்றிலும் நான்கு புறமும் சுவர் எழுப்பினான். குதிரையின் தலைக்கு நேராக சுவரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஜன்னல் மாதிரி வைத்தான். அந்த ஜன்னல் வழியாக நாள் தோறும் ஒரே ஒருவேளை சிறிது காய்ந்த புல்லைக் கொட்டிலுக்குள் வீசுவான் இராமன்.

பசியோடிருக்கும் குதிரைக் குட்டியோ தெனாலி இராமன் புல்லை வீசுவதற்குள், அவன் கையிலிருந்தே அதைப் பிடுங்கித் தின்றுவிடும்.

இவ்வாறு நாள்தோறும் சிறிதளவு காய்ந்த புல்லை மட்டுமே சாப்பிட்டு வந்த தெனாலி இராமனின் குதிரை எலும்பும் தோலுமாக ஆகிவிட்டது.

மூன்று மாதங்கள் கழிந்தன.

அரசர் தாம் கொடுத்திருந்த குதிரைக் குட்டிகளைக் கொண்டு வந்து காட்டச் சொன்னார். எல்லோரும் தாங்கள் வளர்த்த குதிரைகளை அரண்மனைக்குக் கூட்டி வந்தனர்.

ஆனால், தெனாலி இராமனின் குதிரை மட்டும் அரண்மனைக்கு வரவில்லை.

இராமா, உன்னுடைய குதிரை எங்கே? என்று இராமனைப் பார்த்துக் கேட்டார் இராயர்.

"அரசே, அந்த முரட்டுக் குதிரையை என்னால் இழுத்துக் கொண்டு வரமுடியவில்லை. நம்முடைய குதிரை இலாயத் தலைவரான அபூபக்கரை அனுப்பினால் அவரால் அதனைப் பிடித்துக் கொண்டு வரமுடியும் என்று நினைக்கிறேன்" என்றான் இராமன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வளவு பலமுள்ள முரட்டுக் குதிரையாகவா அது இருக்கிறது? சரி, நம் அபூபக்கரை அனுப்பிப் பிடித்து வரச்சொல்வோம் என்று கூறிய இராயர், அரண்மனை இலாயத் தலைவனான அபூபக்கரைக் கூப்பிட்டு இராமனின் குதிரையைக் கொண்டு வருமாறு கூறினார்.

அபூபக்கர் இராமனின் வீட்டுக்குச் சென்றான். இராமனின் மனைவியிடம் "குதிரை எங்கே இருக்கிறது?" என்று கேட்டான்.

அவள் குதிரைக் கொட்டிலை அபூபக்கருக்குக் காட்டினாள்.

அபூபக்கர் குதிரைக் கொட்டிலருகில் சென்றான்.

அங்கே நான்கு புறமும் சுவர் எழுப்பியிருந்தது. ஒரே ஓர் இடத்தில் மட்டும் தலைக்கு மேல் ஒரு ஜன்னல் தெரிந்தது. அதன் வழியாக உள்ளே எட்டிப் பார்த்தான் அபூபக்கர்.

அபூபக்கரின் பழுப்பு நிறத்தாடி ஜன்னல் வழியாக அவனை முந்திக் கொண்டு உள்ளே நுழைவதைப் பார்த்ததும் தெனாலி இராமனின் குதிரை, தெனாலி இராமன் தான் தனக்குக் காய்ந்த புல்லைக் கொண்டு வந்திருக்கிறான் என்ற நினைப்புடன் அபூபக்கரின் தாடியைப் பற்றி இழுத்தது.

அபூபக்கர் அலறித் துடித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரண்மனையிலிருந்து வந்த காவலர்கள் அபூபக்கரின் தாடியை வெட்டி, அவனைக் குதிரையிடமிருந்து காப்பாற்றினார்கள்.

பின்னர் தெனாலி இராமனின் குதிரையை முன்னால் நான்கு பேர் இழுக்க, பின்னால் இரண்டு பேர் தள்ள அரண்மனைக்குக் கொண்டு வந்தார்கள்.

இராமனின் குதிரையைப் பார்த்ததும் இராமா! குதிரைக்குச் சரியான முறையில் தீனி போடாமல் ஏன் இப்படி வளர்த்தாய்? என்றார் இராயர்.

அரசே நான் கொஞ்சமாகத் தீனிபோட்டு வளர்த்ததற்கே இந்தக் குதிரை எல்லோரையும் படாதபாடுபடுத்தி இலாயத் தலைவரின் தாடியைப் பிடித்து இழுத்திருக்கிறதே! அதுமட்டுமல்லாமல் அதனை இங்கு கொண்டுவர முன்னால் நான்கு பேரும் பின்னால் இரண்டு பேரும் தேவைப்படுகின்றனர். நான் சரியான முறையில் இதற்குத் தீனி போட்டு வளர்த்திருந்தால் இன்னும் எத்தனை பேரின் தாடியைப் பற்றி இழுத்திருக்குமோ? அதுவும் தவிர இதனைப் போர்க்களத்திற்கு ஓட்டிச் செல்ல நிறைய ஆட்கள் தேவைப்பட்டிருப்பார்கள். இதையெல்லாம் எண்ணித்தான் நான் அவ்வாறு செய்யவில்லை அரசே! என்றான் இராமன்.

இராமனுடைய விகடப் பேச்சு இராயருக்குச் சிரிப்பை வரவழைத்தது. ஆயினும் அவன் பேரிலுள்ள கோபம் அடங்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரசே குடிமக்களுக்கு எவ்வளவோ தொல்லைகள் இருக்கும். இதற்கு இடையில் இம்மாதிரி ஒரு சுமையைத் தாங்கள் அவர்கள் மீது சுமத்தியதற்கு எதிர்ப்புக் காட்டுவதற்காகத்தான் நான் இம்மாதிரி செய்தேன்" என்றான் இராமன்.

இராமன் சொன்னதைக் கேட்ட இராயர், அந்த குதிரை வளர்ப்புத் திட்டத்தை அத்துடன் கைவிட்டார்.

## 10. சூடு கண்ட பூனை!

**ஊ**ரில் எங்கு பார்த்தாலும் எலிகள்! எலிகளை விரட்ட மக்கள் என்னென்னவோ உபாயங்கள் செய்து பார்த்தனர். ஒன்றும் பயன் தரவில்லை. அரசரிடம் சென்று முறை யிட்டனர்.

குடிமக்கள் குறையைக் கேட்ட இராயர், "நாமும் எவ்வளவோ செய்து பார்த்து விட்டோம். ஒன்றும் பயன் தரவில்லை எலிகளை விரட்ட ஆளுக்கொரு பூனை வளருங்கள். அந்தப் பூனை வளர்ப்புக்கு அரண்மனை யிலிருந்து நாள்தோறும் பால் வாங்கிச் செல்லுங்கள்" என்றார்.

குடிமக்கள் இதற்கு ஒப்புக் கொண்டனர். அரசரின் உத்தரவுப்படி ஆளுக்கொரு பூனைக்குட்டி தரப்பட்டது.

தெனாலி இராமனும் அரசர் கொடுத்த பூனைக் குட்டியை வீட்டுக்குக் கொண்டு வந்தான். அரண்மனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலிருந்து பெற்று வந்த பாலை நன்றாகக் காய்ச்சினான். பால் நன்றாகக் காய்ந்து சூடாகியதும் அதை அப்படியே எடுத்து வந்து பூனையின் முன்னால் வைத்தான்.

பூனை ஆவலுடன் வந்து கொதிக்கும் பாலில் நாக்கை விட்டது.

அவ்வளவுதான் சூடு தாளாமல் கத்திக் கொண்டே பூனை ஓட்டம் பிடித்தது.

அன்றிலிருந்து கொதிக்காமல் ஆற வைத்த பாலாக இருந்தால் கூட அதன் பக்கமே பூனை திரும்பிப் பார்ப்ப தில்லை.

இது தெனாலி இராமன் குடும்பத்தினருக்கு மிகவும் வசதியாகப் போய்விட்டது. பால் பாத்திரத்தைத் திறந்து வைத்துவிட்டுப் போனால் கூடப்பூனை அந்தப் பாலைக் குடிப்பதில்லை. சூடு கண்ட பூனையல்லவா!

சில மாதங்கள் சென்றன. இராயர் தாம் கொடுத்த பூனைகளை மக்கள் எவ்வாறு வளர்த்து வருகிறார்கள் என்று அறிய விரும்பினார். எல்லோரையும் பூனையுடன் அரண் மனைக்கு வருமாறு கூறினார்.

அனைவரும் தாங்கள் வளர்க்கும் பூனைகளுடன் அரண்மனைக்கு வந்தனர். எல்லோருடைய பூனைகளும் வேளாவேளைக்கு அரண்மனைப் பால் சாப்பிட்டுக் கொழு கொழுவென்று இருந்தன. ஆனால் தெனாலி இராமனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனை மட்டும் உடல் வற்றி எலும்பும் தோலுமாய்க் காட்சி அளித்தது. இதைப் பார்த்த இராயர், "இராமா, உன் பூனை மட்டும் ஏன் இப்படி மெலிந்திருக்கிறது? அரண்மனை யிலிருந்து வாங்கிச் செல்லும் பாலை நீ இதற்கு வைப்ப தில்லையா?" என்று கேட்டார்.

நான் என்ன சொல்வேன் அரசே! என் பூனை பாலைக் கண்டாலே காத தூரம் ஓடுகிறது. அதற்கு நான் என்ன செய்வேன்? என்றான் இராமன்.

"என்ன! பாலை வெறுக்கும் பூனை கூட உலகத்தில் உண்டா?" என்று கேட்ட இராயர் ஒரு கிண்ணத்தில் பால் கொண்டு வந்து பூனையின் முன்னால் வைக்கச் சொன்னார்.

இராயர் கூறியவாறே காவலன் ஒருவன் ஒரு கிண்ணத்தில் பால் கொண்டு வந்து தெனாலி இராமனின் பூனையின் முன்னால் வைத்தான்.

பாலைப் பார்த்ததுமே பூனை ஓட்டம் பிடிக்க ஆரம்பித்தது.

"தெனாலி இராமன் ஏதோ சூழ்ச்சி செய்திருக்கிறான். அதுதான் பூனை பாலைக் கண்டாலே ஓடுகிறது" என்று நினைத்த இராயர் "இராமா, நீ செய்தது மிகப் பெரிய குற்றம். வாயில்லா ஜீவனைப் பட்டினி போட்டு வதைத் திருக்கிறாய். அதற்குரிய தண்டனையை நீ அனுபவித்தே ஆக வேண்டும்" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரசே! வாயுள்ள ஜீவன்களாகிய மனிதர்களுக்கே சரிவரப் பால் கிடைப்பதில்லை. இந்த நிலையில் வாயில்லா ஜீவனுக்காக நீங்கள் பரிந்து பேசுவது விந்தையாக இருக்கிறது" என்றான் இராமன்.

நம் மக்களுக்குப் பால் சரிவரக் கிடைப்பதில்லையா? என்று கேட்டார் இராயர்.

ஆம் அரசே! எல்லாப் பால்காரர்களும் தாங்கள் கறக்கும் பாலைப் பூனைகளுக்காக அரண்மனையில் கொண்டு வந்து சேர்ப்பித்து விடுகிறார்கள். அப்படியிருக்க எங்களைப் போன்ற வாயுள்ள ஜீவன்களுக்கு எப்படிப் பால் கிடைக்கும்?

இராயர் தம் தவறை உணர்ந்து குடிமக்கள் அனைவருக்கும் பால் கிடைக்குமாறு செய்தார்.

## 11. ஏற்றமிறைத்த திருடர்கள்


ஒரு சமயம் விஜயநகரத்தில் வரட்சி நிலை ஏற்பட்டது. பருவமழை தவறிவிட்டதால் குளம் குட்டைகளெல்லாம் வரண்டு விட்டன. இராமன் வீட்டுத் தோட்டத்திலுள்ள கிணற்றிலும் நீர் குறைந்து விட்டது.

கிணற்றில் ஏற்றம் இறைத்துச் செடி கொடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்ச இராமன் மிகவும் துன்பப்பட்டான்.

அச்சமயத்தில் ஒருநாள் அவனுடைய தோட்டத்தில் நான்கு திருடர்கள் பதுங்கிக் கொண்டிருந்ததைக் கண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே வீட்டுக்குள் வந்து அடியேய்! நம் நாட்டில் பருவமழை தவறிவிட்டதால் பஞ்சம் ஏற்பட்டு விட்டது. இதன் காரணமாக ஊரில் திருடர்கள் நிறைய பேர் கிளம்பி விட்டனர். என்றாவது ஒருநாள் திருடர்கள் நம் வீட்டிலும் புகுந்து நம் வீட்டிலுள்ளதையெல்லாம் திருடக்கூடும் என்று மனைவியிடம் உரக்கக் கூறினான் இராமன்.

"அதற்கு என்ன செய்யலாம்?" என்று இராமனுடைய மனைவி கேட்டாள்.

நீ போட்டிருக்கிற நகை நட்டு எல்லாவற்றையும் கழற்றி ஒரு முடிப்பில் முடிந்து இந்தப் பெட்டியில் போடு விலையுயர்ந்த பாத்திரங்களையும் இந்தப் பெட்டியில் போட்டு மூடு. இந்தப் பெட்டியை நாம் எடுத்துச் சென்று கிணற்றில் போட்டு விடுவோம். திருடர் பயம் குறைந்த பிறகு நாம் பெட்டியைக் கிணற்றிலிருந்து எடுத்துக் கொள்வோம் என்று உரத்த குரலில் கூறினான் இராமன்.

இது தோட்டத்திலிருந்த திருடர்கள் காதில் விழுந் தது.

"அண்ணே, கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல் இருக்கிறது. அனாவசியமாக இராமனின் வீட்டுக்குள் புகுந்து திருட வேண்டாம். அவனே நகைப் பெட்டியை எடுத்து வந்து கிணற்றில் போடுவான். அவன் போன பிறகு நாம் கிணற்றிலிருந்து பெட்டியை எடுத்துக் கொள்ளலாம்" என்றான் திருடர்களில் ஒருவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களும் இதற்கு ஆமோதித்தனர்.

இதனிடையில் இராமன் மனைவியிடம் திருடர்கள் வந்திருக்கிறதை இரகசியமாகக் கூறிவிட்டு, பெட்டிக்குள் கற்களையும், ஓட்டை உடைசல் சில்லுகளையும் வைத்து மூடினான். பெட்டியைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வந்து கிணற்றில் போட்டான்.

இராமன் வீட்டுக்குள் போனதும் திருடர்கள் கிணற்ற ருகில் வந்தனர். கிணறு ஆழமாக இருந்தது. அதற்குள் இறங்கத் திருடர்கள் பயந்தனர்.

"அண்ணே, கிணற்றில் தண்ணீர் குறைவாகத் தான் இருக்கிறது. நாம் நால்வரும் ஏற்றம் இறைத்தால் தண்ணீர் வற்றிவிடும். பிறகு சுலபமாகக் கிணற்றுக்குள் இறங்கிப் பெட்டியை எடுத்துச் சென்றுவிடலாம்" என்றான் திருடர் களில் ஒருவன்.

அதன்படி திருடர்கள் நால்வரும் ஏற்றம் இறைக்க லாயினர்.

சற்று நேரம் கழித்துத் தெனாலி இராமன் வேறு வழியாகத் தோட்டத்திற்குச் சென்றான். பாத்திகளை வெட்டித் தண்ணீர் எல்லாச் செடி கொடிகளுக்கும் பாயு மாறு செய்து விட்டான்.

பொழுது விடிந்து கொண்டிருந்தது, இன்னும் கிணற்றிலிருந்து தண்ணீர் குறையவில்லை. திருடர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் வந்து தண்ணீர் இறைக்கலாம் என்று பேசியபடியே சென்று கொண்டிருந்தனர்.

அப்போது தோட்டத்திலிருந்து வெளியே வந்த இராமன், “நாளைக்கு நீங்கள் வரவேண்டாம். இப்பொழுது நீங்கள் இறைத்திருக்கிற தண்ணீர் இரண்டு நாட்களுக்கு போதும். போய் வாருங்கள், நண்பர்களே! உங்கள் உதவிக்கு நன்றி!” என்று திருடர்களை பார்த்துக் கூறினான்.

திருடர்களுக்கு அவமானமாகப் போய்விட்டது. தங்களிடமே இராமன் வேலை வாங்கிக் கொண்டதை நினைத்து ஓட்டம் பிடித்தனர்.

## 12. திலகாஷ்ட மகிஷ பந்தனம்

வடநாட்டில் ஒரு பெரிய வடமொழிப் புலவர் இருந்தார். அவர் பெயர் வித்தியாசாகரர் என்பது. வட மொழில் அவர் கற்காத நூல்களே இல்லை.

ஒருமுறை வித்தியாசாகரர் விஜயநகரத்திற்கு வந்தார்.

இராயரிடம், “அரசே, தங்கள் அவையில் அஷ்டதிக் கஜங்கள் என்ற பெயருடன் எட்டு பெரும்புலவர்கள் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவர்களுடன் வடமொழி யில் இயற்றப்பட்ட எந்த நூலாக இருந்தாலும் அதைப்பற்றி வாதிடத்தயார். என்னுடன் வாதம் செய்ய எவராவது முன் வருவார்களா?” என்று கேட்டார் வித்தியாசாகரர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாசாகரரின் புகழை நன்கு அறிந்தவர்கள் இராயரின் அரசவைப் புலவர்கள். வித்தியாசாகரருடன் போட்டியிட்டு அவரைத் தோல்வியுறச் செய்வது கடினம் என்று அவர்கள் உணர்ந்திருந்தனர்.

எனவே வித்தியாசாகரருடன் வாதிட ஒருவரும் முன் வரவில்லை.

அரசவையில் முதன்மைப் புலவராக இருக்கும் அல்லசானி பெத்தன்னா என்பவரைப் பார்த்து, "ஆந்திர கவிதா பிதாமகர் என்று போற்றப்படும் பெத்தன்னா அவர்களே! உங்கள் புகழ் ஒப்புயர்வற்றது. மனுசரித்திரம் ஹரிகதாசாரம் போன்ற புகழ்மிக்க நூல்களை எழுதித் தெலுக்கு மொழிக்குப் புத்துயிர் அளித்திருக்கிறீர்கள். நீங்கள் கற்காத வட மொழி நூல் எதுவும் இல்லை. நீங்களே வித்தியாசாகரருடன் வாதிட ஏற்றவர் என்றார்" இராயர்.

இதைக் கேட்ட பெத்தன்னா, "அரசே இன்று என் மனம் சரியில்லை. ஆகவே தாங்கள், வேறு எவரையாவது இதற்காகத் தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

அடுத்து நந்தி திம்மன்னா என்பவரைப் பார்த்து, "திம்மன்னா, பாரிஜாதபஹரணம் என்ற ஒப்புயர்வற்ற நூலை எழுதிய நீயாவது இவருடன் வாதிட முன்வருவாயா? என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“மன்னிக்க வேண்டும் அரசே! வடமொழி நூல்களில் எனக்கு அவ்வளவாகப் பரிச்சயம் கிடையாது”என்றார் நந்தி திம்மன்னா.

“மாதய்யாகாரி மல்லண்ணா, பிங்கிலி சூரண்ணா, தூர்ச்சடி உங்களில் யாராவது ஒருவர் இவரிடம் வாதிட்டு இவரைத் தோற்கடிக்க முடியாதா?” என்று மற்ற புலவர்களைப் பார்த்துக் கேட்டார் இராயர்.

அனைவரும் மௌனமாக இருந்தனர்.

“இத்தனை புலவர்கள் உங்கள் அரசவையில் இருந்தும் ஒருவர் கூட என்னிடம் வாதிட முன் வராதது குறித்து மிகவும் வருத்தப்படுகிறேன். இம்மாதிரி ஒருநிலை ஏற்படும் என்று தெரிந்திருந்தால் இந்த விஜய நகரத்தின் பக்கமே வந்திருக்கமாட்டேன்” என்றார் வித்தியாசாகரர்.

“இப்பொழுதே ஏன் வருத்தப்படுகிறீர்கள்? போட்டியில் தோல்வியடைந்த பிறகு தானே வருத்தப்பட வேண்டும்?” என்றான் தெனாலி இராமன்.

“என்னைப் போன்றவர்களுக்கு போட்டி இருந்தால் தான் மகிழ்ச்சி. அதில் வருபவர்களை வெற்றி கொள்வதற்குப் போட்டிதான் மூல காரணம். போட்டியே நடக்கவில்லை என்றால் எனக்கு வருத்தம் ஏற்படக்கூடியது இயல்புதானே!” என்று தெனாலி இராமனை நோக்கிக் கூறினார் வித்தியாசாகரர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை, உங்களுடன் போட்டியிட எவரும் முன்வர வில்லை என்பது தவறு. நானும் ஓர் அரசவைப் புலவன் தான். தெனாலி இராமலிங்கன் என்பது எனது இயற்பெயர். உத்படாராத்ய சரித்திரம், பாண்டுரங்க மஹாத்மியம், கடிகாசல மஹாத்மியம், கந்தர்ப்பகேது விலாசம் என்ற நூல்களைப் படித்திருப்பீர்கள். அவற்றை இயற்றியவன் அடியேன்தான். என்னிடம் வாதிடத் தங்களுக்குச் சம்மதம் தானா?" என்று வித்தியாசாகரரைப் பார்த்துக் கேட்டான் தெனாலி இராமன்.

"தெனாலி இராமன் என்று வழங்கப்படுகிற தெனாலி இராமலிங்கரா நீங்கள்! உங்களைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். உங்களிடம் வாதிடுவதில் நான் மிக்க மகிழ்ச்சியே அடைகிறேன். வாதப் போட்டியை எப்பொழுது வைத்துக் கொள்ளலாம்?" என்றார் வித்தியா சாகரர்.

"நாளைய தினம் வைத்துக் கொள்ளலாம்!" என்றான், தெனாலி இராமன்.

மறுநாள் தெனாலி இராமன் ஒரு துணி மூட்டை யுடன் அரசவைக்கு வந்தான்.

"இராமா, இது என்ன துணிமூட்டை?" என்றார் இராயர்.

"அரசே, இன்று நான் வாதிடப் போகும் வடமொழி நூலின் ஏட்டுப் பிரதிகள் இதில் இருக்கின்றன. இந்நூலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி வாதிடும்போது வித்தியாசாகரர் தவறான கருத்து எதையாவது சொல்லிவிட்டால், உடனே மூல நூலை எடுத்துக் காட்ட வேண்டுமென்பதற்காக அந்நூலின் ஏட்டுப் பிரதியைக் கொண்டு வந்து விட்டேன்" என்ற இராமன் வித்தியாசாகரரை நோக்கி "ஆரம்பிக்கலாமா? திலகாஷ்ட மகிஷபந்தனம் பற்றி இப்பொழுது வாதிடலாம்" என்றான்.

"திலகாஷ்ட மகிஷபந்தனம்" என்ற நூலைப் பற்றி இதுவரை வித்தியாசாகரர் கேள்விபட்டதே இல்லை. அவ் வாறு இருக்கையில் அதைப்பற்றி எவ்வாறு வாதிட முடியும்.

"அரசே என் உடல்நிலை சரியில்லை, நாளைய தினம் வாதப்போட்டியை வைத்துக் கொள்ள அனுமதி வழங்க வேண்டுகிறேன்" என்று இராயரிடம் கேட்டார் வித்தியாசாகரர்.

அப்படியே செய்யுங்கள்! என்றார் இராயர்.

வித்தியாசாகரர் 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று நினைத்தவராக இரவோடிரவாக ஊரை விட்டு ஓடியே போய்விட்டார்.

மறுநாள் தெனாலி இராமன் முன்தினம் கொண்டுவந்த துணிமூட்டையுடன் அரசவைக்கு வந்தான். வித்தியாசாகரருக்காக நெடுநேரம் காத்திருந்தான்.

வித்தியாசாகரர் வரவே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராயர் சேவகனை அனுப்பி விசாரித்ததில் இரவோடு இரவாக வித்தியாசாகரர் ஊரைவிட்டு ஓடிப்போய் விட்ட செய்தி தெரிய வந்தது.

வித்தியாசாகரரையே விரட்டிவிட்ட அந்த ஒப்புயர் வற்ற நூலைக் கொஞ்சம் காட்டு, பார்ப்போம்! என்று தெனாலிராமனைப் பார்த்துக் கூறினார்.

துணி மூட்டையைப் பிரித்தான் இராமன்.

மூட்டைக்குள் ஓர் எள்ளுக்குச்சி எருமைகட்டும் கயிற்றால் கட்டப்பட்டிருந்தது.

இது என்ன வேடிக்கை? என்னவோ திலகாஷ்ட மகிஷ பந்தனம் என்றாய், கடைசியில் எள்ளுக்குச்சியும், எருமை கட்டும் கயிறும் தான் இருக்கின்றனவே என்றார் இராயர்.

"அரசே! தங்களுக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை. திலம் என்றால் எள். காஷ்டம் என்றால் குச்சி. இரண்டும் சேர்ந்து திலகாஷ்டமாயிற்று. எருமையை மகிஷம் என்று வடமொழியில் சொல்லுவார்கள். பந்தனம் என்றால் கட்டுவது என்று பொருள். எள்ளுக்குச்சியை எருமை கட்டும் கயிற்றால் கட்டுவது என்பதற்கு வடமொழியில் திலகாஷ்ட மகிஷபந்தனம் என்று பெயர்" என்றான் இராமன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்ல வேடிக்கை செய்தாய். இதையும் ஒரு நூலின் பெயர் என்று நினைத்துக் கொண்டு வித்தியாசாகரர் ஓட்டம் பிடித்து விட்டாரே?" என்றார் இராயர்.

இராமனின் புத்திசாலித்தனத்தை மெச்சி அவனுக்கு நிறையப் பரிசுகள் கொடுத்தார் இராயர்.

# 13. கூனை நிமிர்த்த வழி!

**வி**ஜயநகரில் ஒரு துன்மார்க்கன் இருந்தான். அவன் விரைவில் பொருள் சேர்த்துவிட வேண்டுமென்ற ஆசை யினால் சன்னியாசி வேஷம் போட்டுக் கொண்டான். நாகதாளிப் பழத்தின் சாற்றிலிருந்து தயாரித்த ஒரு போதைப் பொருளை உருவாக்கினான்.


அவ்வூரிலுள்ள மூடர்கள் யார் என்று அறிய விரும்பினான். இதற்காக அவ்வூரில் இருந்த ஒரு சலவைத் தொழிலாளியை நட்புச் செய்து கொண்டான். இந்த சலவைத் தொழிலாளி ஒரு கூனன்.

சலவைத் தொழிலாளி அனைவர் வீடுகளுக்கும் சென்று வருபவன். ஆதலால், அவ்வூரில் உள்ள மூடர்களின் முகவரியைக் கபட சன்யாசிக்குத் தெரிவித்து விட்டான்.

கபட சன்யாசி அவர்களை வரவழைத்து இச்சக மாகப் பேசினான். தான் கொடுக்கும் மருந்தைச் சாப்பிட்டால் பொன்னும் பொருளும் நிறைய வந்து சேருமென்று ஆசை காட்டினான். அந்த மூடர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சன்யாசி கொடுத்த மருந்தை வாங்கிக் கொண்டனர். ஒவ்வொருவரும் மருந்துக்காக சாமியாரிடம் நிறையப் பொருள் கொடுத்தனர்.

சாமியாரிடம் மருந்து வாங்கிச் சாப்பிட்டவர் களுக்குப் பொன்னும் பொருளும் கிடைக்கவில்லை. மாறாக மருந்தைச் சாப்பிட்ட அனைவரும் எமலோகத்தை நோக்கி பயணமாயினர். ஆனால், ஒருவன் மட்டும் பைத்தி யம் பிடித்துத் தெருத்தெருவாக அலைந்து கொண்டி ருந்தான்.

இதைத் தெரிந்து கொண்ட தெனாலி இராமன் கபட சன்யாசிக்குச் சரியான தண்டனை வழங்க வேண்டுமென்று நினைத்தான்.

ஒருநாள் கபட சன்யாசியைத் தந்திரமாக அழைத்து வந்து, பைத்தியக்காரன் முன்னால் நிறுத்தினான்.

வெறிபிடித்த பைத்தியக்காரன் அருகே இருந்த ஒரு கட்டையை எடுத்து சாமியாரின் மண்டையில் ஓங்கி அடித்தான்.

சாமியார் மண்டை உடைந்து இறந்துவிட்டார்.

இதை அறிந்த காவலர்கள் கொலையாளியையும், கொலைக்கு உடந்தையாக இருந்த தெனாலி இராமனை யும் பிடித்துக் கொண்டு இராயரின் முன்னால் நிறுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது சபையில் தாத்தாச்சாரியார் இருந்தார். அவருக்குத் தெனாலி இராமன் பேரில் நீண்ட நாட்களாகவே வெறுப்பு.

"கொலையாளி சித்த சுவாதீனமில்லாதவன். எனவே அவன் பேரில் தவறு இல்லை. அவனைக் கொலை செய்யுமாறு தூண்டியவன் தெனாலி இராமன்தான். கொலை செய்வதை விடக் கொலை செய்யத் தூண்டுவது பெரிய குற்றம். எனவே இவனுக்கு மரண தண்டனை அளித்து விடவேண்டும்" என்று இராயரிடம் கூறினார், தாத்தாச்சாரியார்.

"நீங்கள் சொல்வது முற்றிலும் உண்மை" என்று கூறிய இராயர், "இவனைக் கழுத்தளவு பூமியில் புதைத்து யானையைக் கொண்டு இடறச் செய்யுங்கள். இதுதான் சரியான தண்டனை" என்றார்.

காவலர்கள் இராமனை அழைத்துச் சென்றனர். ஊருக்கு வெளியேயுள்ள ஒரு மைதானத்திற்கு வந்தனர். அங்கு ஒரு பெரிய பள்ளம் தோண்டினர். இராமனை அதற்குள் இறக்கி மண்ணைத் தள்ளிவிட்டனர்.

பூமிக்குள் புதையுண்ட இராமனின் தலை மட்டும் வெளியே தெரிந்தது.

"சரி, இவனைப் புதைத்தாகிவிட்டது. இனி இவன் இங்கிருந்து தப்பிச் செல்ல முடியாது. நாம் போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானையைக் கொண்டு வருவோம்" என்று காவலர்கள் அரண்மனையை நோக்கிச் சென்றனர்.

அப்பொழுது அவ்வழியே கூனனாகிய சலவைத் தொழிலாளி அழுக்கு மூட்டையுடன் வந்து கொண்டிருந்தான். அவன் பூமியில் புதையுண்டு இருக்கும் தெனாலி இராமனைப் பார்த்தான்.

"நீங்கள் யார்? ஏன் இப்படி பூமியில் புதைந்து கிடக்கிறீர்கள்?" என்று இராமனிடம் கேட்டான்.

"ஐயா நான் ஒரு கூனன். பத்து வருடங்களாக கூனினால் மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருந்தேன். சன்யாசி ஒருவர் இவ்விடத்தில் நாள் முழுவதும் பள்ளத்தில் புதையுண்டு இருக்க வேண்டுமென்றும், எது நடந்தாலும் வாய் திறக்கக் கூடாது என்றும் கூறினார். அதன்படியே இங்கு புதையுண்டு கிடக்கிறேன். சாமியார் சொன்னது உண்மைதானா என்று சோதித்துப் பார்க்க ஆவலாக இருக்கிறது. தயவு செய்து இந்தப் பள்ளத்தைத் தோண்டி என்னை வெளியேற்றுங்கள்" என்று கூனனிடம் கூறினான், இராமன்.

கூனனும் அவன் பேச்சை நம்பிக்கொண்டு பூமியைத் தோண்டி தெனாலி இராமனை விடுவித்தான்.

வெளியே வந்த தெனாலி இராமன், "ஆஹா! என் குருநாதரின் மகிமையே மகிமை! முதலில் அவரிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று ஆசீர்வாதம் வாங்க வேண்டும்" என்று ஓடுவதற்குத் தயாரானான்.

"தம்பி, தம்பி நானும் இந்தக் கூனினால் ரொம்பக் கஷ்டப்படுகிறேன். எல்லோரும் என்னைக் கேலி செய்கிறார் கள். என் மனைவி கூட என்னை மதிப்பதில்லை. என்னை யும் இந்தப் பள்ளத்தில் தள்ளி மண்ணைப் போட்டு மூடிவிடு" என்றான் கூனன்.

தெனாலி இராமன் கூனனைப் பள்ளத்தில் தள்ளி மண்ணைப் போட்டு மூடினான். போகும் போது, "சொன்னது ஞாபகமிருக்கட்டும், என்ன நடந்தாலும் வாயே திறக்கக்கூடாது" என்று கூனனிடம் சொல்லிவிட்டுப் போனான்.

அரண்மனைக்குப் போன காவலர்கள் யானையுடன் வந்திருந்தனர். அவர்கள் யானை மேல் இருந்ததால் புதையுண்டிருப்பவனின் முகத்தைச் சரியாக பார்க்க முடியவில்லை. யானையை அவன் மேல் இடறிக் கொன்று விட்டுச் சென்றனர்.

மறுநாள் மரண தண்டனை பெற்ற தெனாலி இராமன் சபையில் வந்து நின்றதைப் பார்த்த இராயர் ஆச்சரியப்பட்டார்.

"உன்னைக் கொன்று விட்டதாக காவலாளிகள் சொன்னார்களே, நீ எப்படி உயிர் பிழைத்து வந்தாய்?" என்று கேட்டார், இராயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரசே, தாத்தாச்சாரியார் சொன்னவாறு பல கொலைகளுக்கு உடந்தையாக இருந்த ஒருவனை எனக்குப் பதில் பள்ளத்தில் இருக்கச் செய்து விட்டேன். எனக்குப் பதிலாக அவன்தான் மரணமடைந்தான்," என்றான் இராமன்.

"விவரமாகக் கூறு" என்று இராயர் கூறியதும் இராமன் கபட சன்யாசியைப் பற்றியும், கூனன் அவனுக்கு உதவி செய்ததைப் பற்றியும் அரசரிடம் கூறினான்.

"நல்ல வேலை செய்தாய்! அந்தக் கபட சன்யாசி கொலை செய்யப்பட்டது நியாயமே! அவனுக்கு உடந்தையாக இருந்த கூனன் கொல்லப்பட்டதும் நியாயமே!" என்று கூறிய இராயர் தாத்தாச்சாரியார் இருந்த திசையில் பார்த்தார்.

இந்தச் சந்தடியில் அவர் எப்பொழுதோ சபையிலிருந்து நழுவிவிட்டார்.


## 14. கொல்ல வந்தவர்கள் வெட்டுண்டனர்!

ஒருமுறை தெனாலி இராமன் இராயரின் கடுங்கோபத்துக்கு ஆளாகினான்.

"இப்படிப்பட்ட முட்டாள்கள் உயிரோடு இருப்பதை விட இறப்பதே மேல்!" என்று கூறிய இராயர் தெனாலி இராமனைச் சிரச்சேதம் செய்யச் சொல்லி உத்தரவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராயரின் ஆணைப்படி இரண்டு கொலையாளிகள் உருவிய வாளுடன் தெனாலி இராமனை நோக்கி வந்தார் கள்.

“அரசே, நான் சாவதைப் பற்றி அஞ்சவில்லை. ஆனால், சாவதற்கு முன்னால் ஒரு வேண்டுகோள். இறப்ப தற்கு முன்னால் கழுத்தளவு தண்ணீரில் நின்று கொண்டு சூரிய நமஸ்காரம் செய்ய விரும்புகிறேன் என் தியானம் முடிந்து நான் வெட்டுங்கள் என்று சொன்னதும் இந்தக் கொலையாளிகள் என் தலையை வெட்டி விடலாம்” என் றான் இராமன்.

“சரி, அப்படியே செய்யுங்கள்!” என்று கொலையாளி களுக்கு உத்தரவிட்டார் இராயர்.

கொலையாளிகள் இராமனை ஒரு குளத்துக்கு அழைத்துச் சென்றனர்.

இராமன் கழுத்தளவு நீரில் நின்று கொண்டான். அவனுடைய இரு பக்கத்திலும் இரண்டு கொலையாளி களும் உருவிய வாளுடன் நின்று கொண்டிருந்தனர்.

தெனாலி இராமன் சூரிய பகவானை நோக்கி நெடு நேரம் தியானம் செய்து கொண்டிருந்தான். எப்பொழுது அவன் ‘வெட்டுங்கள்’ என்று சொல்லுவான் என்று இருவரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்ச நேரம் சென்றதும் 'வெட்டுங்கள்' என்று கூறிய தெனாலி சட்டென்று தண்ணீருக்குள் தலையை இழுத்துக் கொண்டான்.

'வெட்டுங்கள்' என்ற குரலைக் கேட்ட இரு கொலையாளிகளும் தங்கள் வாளை ஓங்கி வீசினர்.

தெனாலி இராமன் நடுவே இல்லாததால் இருவருடைய உடைவாட்களும் அவர்களுடைய கழுத்துக்களையே வெட்டிவிட்டன.

மீண்டும் கொலைத் தண்டனையிலிருந்து மீண்ட இராமன் சபைக்கு வந்தான்.

"இந்த முறை கொலையாளிகளை எப்படி ஏமாற்றிவிட்டு வந்தாய்?" என்று இராயர் கேட்டார்.

"அரசே, எனக்குத் தண்டனை கொடுக்கும் போது முட்டாள்கள் உயிரோடு இருப்பதைவிட இறப்பதே மேல் என்றீர்கள். அதன்படி நம்மிடம் காவலர்களாக இருந்த இரண்டு முட்டாள்களை இறக்கும்படி செய்துவிட்டேன்" என்றான் இராமன்.

## 15. மரணத்தை வென்றவன்!

**வி**ஜயநகர, மன்னருக்குப் பல பகைவர்கள் இருந்தனர். அவர்களில் கோல்கொண்டா சுல்தான் முதன்மையானவன். இராயரைப் போரில் வெல்லப் பயந்து கொண்டு சூழ்ச்சியினால் இராயரைத் தொலைத்துக் கட்ட முடிவு செய்து இருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்காக ஓர் ஒற்றனைத் தேர்ந்தெடுத்து, "எப்படி யாவது கிருஷ்ண தேவராயரைக் கொலை செய்துவிட்டு வரவேண்டும்" என்று அவனிடம் கூறினான்.

ஒற்றனும் கோல்கொண்டா சுல்தான் கூறியவாறு விஜயநகரம் வந்தான். ஒரு முதியவரைப்போல் வேடம் போட்டுக் கொண்டு தெனாலி இராமனின் வீட்டுக்குச் சென்றான். தான் தெனாலி இராமனின் ஒன்றுவிட்ட தாய் மாமன் என்றும் சிறுவயதிலேயே வீட்டை விட்டு வெளியேறி விட்டதால் அவர்களைப் பார்க்க முடியவில்லையென்றும் கூறினான்.

அவன் பேச்சை அப்படியே நம்பித் தன் வீட்டில் அவனுக்கு அடைக்கலம் கொடுத்தான் இராமன்.

ஒற்றனும் இராமனிடமும், இராமனின் குடும்பத்தா ரிடமும் நல்ல முறையில் பழகி நல்ல பெயர் எடுத்துக் கொண்டான்.

ஒருநாள் இராமன் தன் குடும்பத்தாருடன் ஒரு திருவிழாவுக்குச் செல்ல நேர்ந்தது. அச்சமயத்தில் ஒற்றன் மட்டும் தெனாலி இராமன் வீட்டில் இருந்தான். அவனுடைய சூழ்ச்சிக்கார மூளை "இதுதான் சரியான சந்தர்ப்பம் இரா யரை இவ்விடம் வரவழைத்து விட்டால் அவரைக் கொன்றுவிடுவது சுலபம்" என்று நினைத்தான்.

இராமன் எழுதுவதைப்போல் ஒரு கடிதம் இராய ருக்கு எழுதினான். அதில், "அரசே உடனே புறப்பட்டு என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிற்கு வந்தால் ஒரு பெரிய அதிசயத்தைக் காண்பீர்கள். தனியாக வரவும்" என்று எழுதினான்.

வெளியே வந்தபோது அரண்மனை காவலாளிகள் அவ்வழியாகச் சென்று கொண்டிருந்தனர்.

"என்ன பெரியவரே, இராமன் வீட்டில் இல்லையா?" என்று கேட்டனர்.

"இராமன் தன் குடும்பத்தாருடன் திருவிழாவிற்குச் சென்றிருக்கிறான். அரசரிடம் முக்கியமான செய்தி ஏதோ தெரிவிக்க வேண்டுமென்று கூறி அதை ஒரு கடிதத்தில் எழுதி, என்னிடம் கொடுத்து அரசரிடம் சேர்ப்பித்து விடச் சொன்னான். நானும் அரண்மனைக்குப் போக வேண்டும். எனக்கு வழிகாட்டுங்கள்" என்றான் காவலர்களிடம்.

நீங்கள் ஏன் இந்தத் தள்ளாத வயதில் அவ்வளவு தூரம் நடந்து வருகிறீர்கள். தெனாலி இராமன் கொடுத்த கடிதத்தை எங்களிடம் கொடுங்கள். நாங்கள் அதை அரசரிடம் சேர்ப்பித்து விடுகிறோம்" என்று கூறிய காவலர்கள், ஒற்றன் கொடுத்த கடிதத்தை வாங்கிக் கொண்டு அரண்மனைக்குச் சென்றனர். அரசரிடம் கடிதத்தைக் கொடுத்தனர்.

தெனாலி இராமன் எழுதியிருந்ததைப் படித்த இராயர் உடனே குதிரை லயத்திற்குச் சென்றான். ஒரு குதிரையிலேறித் தெனாலி இராமனின் வீட்டிற்கு வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் சூழ்ச்சி இவ்வளவு சுலபமாகப் பலித்து விடும் என்று ஒற்றன் நினைக்கவில்லை.

உள்ளே வந்த இராயர் ஒற்றனிடம், "எங்கே தெனாலி இராமன்" என்று கேட்டார்.

"அதோ உள்ளே இருக்கிறான்" என்று சொல்லிய ஒற்றன் ஓர் அறையைக் காண்பித்தான்.

இராயர் அந்த அறைக்குள் நுழையும்போது தன் மடியிலிருந்த கட்டாரியை எடுத்து அவரைக் குத்த முயன்றான்.

இதைப் பார்த்துவிட்ட இராயர் சட்டென்று விலகி, அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு கெட்டியாக முறுக்கினார். அவன் கையிலிருந்த கட்டாரி கீழே விழுந்தது.

இந்த சப்தத்தைக் கேட்டுத் தெருவில் சென்று கொண்டிருந்த காவலர்கள் தெனாலி இராமனின் வீட்டுக்குள் நுழைந்தனர்.

காவலர்களைக் கண்ட இராயர் ஒற்றனை உடனடியாகக் கைது செய்யுமாறு உத்தரவிட்டார்.

மறுநாள் அரச சபையில் ஒற்றனும், தெனாலி இராமனும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டனர்.

இராயரைக் கொலை செய்ய முயன்றதற்காக ஒற்றனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகை நாட்டு ஒற்றன் ஒருவனுக்கு வீட்டில் இடம் கொடுத்ததற்காகவும், அரசரைக் கொல்ல முயன்றவனுக்கு உடந்தையாகவும் இருந்த காரணங்களைக் காட்டித் தெனாலி இராமனுக்கும் மரண தண்டனை விதிக்குமாறு ஆணையிட்டார் இராயர்.

தெனாலி இராமன் நடந்த கதை முழுவதும் கூறித் தனக்கு ஒன்றுமே தெரியாது என்றும், தன்னை மன்னிக்கு மாறும் இராயரிடம் கேட்டுக் கொண்டான்.

தெனாலி இராமன் கூறியதைக் கேட்ட இராயர், "உனக்காக சட்டத்தை மாற்ற முடியாது. நீ செய்த குற்றங் களுக்கு உரிய தண்டனையைத் தான் கொடுத்திருக்கிறேன். ஆனால், உனக்காக வேண்டுமானால் ஒன்று செய்கிறேன். நீ எப்படி இறக்க விரும்புகிறாய் என்பதைச் சொல். அதன்படி தண்டனையை நிறைவேற்றச் சொல்கிறேன்" என்றார்.

"அரசே, வயதாகி முதுமையடைந்து இயற்கையான மரணம் வரும்போது தான் நான் சாக விரும்புகிறேன். அம்மாதிரியான சமயத்திலேயே உங்களுடைய தண் டனையை நிறைவேற்ற வேண்டுகிறேன்" என்றான் இராமன்.

இராமனின் சாதுரியமான பேச்சைக் கேட்டு அவனை விடுதலை செய்தார் இராயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. புத்துயிர் பெற்றான்!

இராயர் கொடுக்கும் சம்பளம் இராமனுக்குப் போத வில்லை. செலவை சரிக்கட்ட இராயரிடம் அவ்வப்போது கடன் வாங்கி வந்தான். சிறுகச்சிறுக வாங்கிய கடன் ஒரு பெருந்தொகையாக ஆகிவிட்டது.

இராயரும் பல தடவை அவனிடம் இதுபற்றிக் கூறினார்.

"மொத்தமாக உன்னால் கொடுக்க முடியாவிட்டால் உன் சம்பளத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்துக் கழித்துவிடு" என்றார் இராயர்.

இராயர் கொடுக்கும் சம்பளமோ அவனுடைய செலவுக்குப் போதவில்லை. இந்த நிலையில் சம்பளத்தி லும் பிடித்தம் செய்தால் என்ன செய்வது என்று வருந்தி னான்.

ஒருநாள் தெனாலி இராமனின் மனைவி அரச வைக்கு வந்தாள். இராயரிடம், "தங்களுடைய கடனைத் தீர்க்க முடியவில்லையே என்ற கவலையினால் என் கணவர் படுத்த படுக்கையாக ஆகிவிட்டார். இப்பொழுதோ இன்னும் சற்று நேரத்திலே இறந்துவிடுகிற நிலையில் இருக்கிறார். நீங்கள் அவருடைய கடனை ரத்து செய்து விட்டேன் என்று கூறினால் தான் அவர் ஆன்மா சாந்தியடையும் என்று கூறுகிறார்" என்றாள் இராமனின் மனைவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராயர் அவன் வீட்டுக்குச் சென்றார். கூடத்தில் தெனாலி இராமன் படுத்துக் கொண்டிருந்தான். அவன் மேல் ஒரு போர்வை போர்த்தப்பட்டிருந்தது. கண்களை மூடியவாறு ஏதோ முனகிக் கொண்டிருந்தான்.

தெனாலி இராமனின் நிலைக்காக வருந்திய இராயர், "இராமா, உன்னுடைய கடன் முழுவதையும் ரத்து செய்து விட்டேன். உன் கடன் சம்பந்தமாக இனி உன் குடும்பத்தாரிடமும் கேட்கமாட்டேன். ஒரு கவலையும் இல்லாமல் நீ இறக்கலாம்" என்றார்.

மறுகணம் போர்வையை உதறிவிட்டு இராமன் எழுந்து உட்கார்ந்து கொண்டான்.

"அரசே, தாங்கள் கொடுத்த கடனால் நான் சாகக் கிடந்தேன். இப்பொழுது நீங்கள் அதை ரத்து செய்து விட்டதாகக் கூறியதும் எனக்குப் புத்துயிர் வந்துவிட்டது" என்றான் இராமன்.


## 17. ஆளுக்குப் பாதி!

**கோ**குலாஷ்டமி தினம், கண்ணன் பிறந்தநாள். அன்றைய தினம் ஆயர்குல மக்களும் மற்றவர்களும் கண்ணனை வணங்கிக் கோலாகலமாயிருந்தனர்.

இச்சமயத்தில் குச்சிப்புடி என்னும் ஊரிலிருந்து ஒரு நாட்டியக் குழு விஜயநகருக்கு வந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் பல நாட்டிய நாடகங்களை நடத்தி வந்தனர். அவற்றில் கிருஷ்ணலீலா என்னும் நாட்டிய நாடகம் பிரசித்தி பெற்றது.

கோகுலாஷ்டமியன்று அரண்மனையில் அவர்களுடைய கிருஷ்ணலீலா நாடகத்தை நடத்தச் சொன்னார் இராயர்.

குச்சிப்புடி நாட்டியக் குழுவினரும் மன்னர் சொன்னதற்கு ஒப்புக் கொண்டனர்.

அன்று இரவு அரண்மனையிலுள்ள அரங்கில் கிருஷ்ணலீலா நாடகம் நடைபெற இருந்தது.

அந்த நாடகத்தைக் காண அமைச்சர்களுக்கும் உயர் அதிகாரிகளுக்கும் பிறருக்கும் அழைப்புகள் அனுப்பப்பட்டன. ஆனால், தெனாலி இராமனுக்கு மட்டும் அழைப்பு அனுப்ப வேண்டாமென்று இராயர் கூறிவிட்டார்.

ஏனெனில் "இராமன் சும்மாயிருக்கமாட்டான் ஏதாவது குறும்புத்தனம் செய்து நாடகத்தைக் கெடுத்து விடுவான்" என்று நினைத்தார் இராயர்.

இராமனுக்கு அழைப்பு அனுப்பாதது மட்டுமில்லை, அவனை அரண்மனைக்குள்ளேயே விடக்கூடாதென்று வாயில் காவலர்களுக்கும் உத்தரவிட்டுவிட்டார்.

இதையறிந்த இராமன் சும்மாயிருக்கவில்லை. நேரே அரண்மனைக்குச் சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது நாடகம் நடந்து கொண்டிருந்தது. வாயில் காவலன் இராமனைப் பார்த்துவிட்டான். இராயர் உத்தரவிட்டிருந்தது அவனுடைய நினைவுக்கு வந்தது. உடனே இராமன் உள்ளே செல்லாதவாறு வழியை மறித்துக் கொண்டான்.

"உங்களை உள்ளே விடக்கூடாதென்று மன்னரின் உத்தரவு" என்றான் வாயில் காவலன்.

நான் அவசர காரியமாக அரசரைப் பார்க்க வேண்டும். நான் அவரிடம் ஒரு முக்கியமான செய்தியைச் சொல்லப்போகிறேன். இதுரொம்பவும் நல்ல செய்தி, இப்பொழுதே போய் அதனை அவரிடம் சொல்ல வேண் டும். நான் சொல்லும் செய்தியைக் கேட்டதும் அவர் மகிழ்ந்து போவார். எனக்குப் பல பரிசுகள் அளிப்பார். இந்தச் சமயம் என்னைத் தடுக்காதே! எனக்குக் கிடைக்கும் பரிசில் உனக்கு ஏதாவது தருகிறேன்" என்றான் இராமன்.

"ஏதாவது என்று சொன்னால் நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். கணக்காக இருக்க வேண்டும். உங்களுக்குக் கிடைக்கும் பரிசில் எனக்குச் சரிபாதி கொடுப்பதாக இருந்தால் உங்களை உள்ளே போக அனுமதிக்கிறேன்" என்றான் வாயில் காப்போன்.

இராமனும் வாயில் காப்போன் சொன்னதற்கு ஒப்புக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது வாயிலுக்குச் சென்றதும் அங்கு ஒரு காவலன் இருந்தான். அவனும் இராமன் உள்ளே செல்லாதவாறு தடுத்தான்.

அவனிடமும் முதல் காவலனிடம் கூறியதையே கூறித் தனக்குக் கிடைக்கும் வெகுமதியில் அவனுக்குச் சரிபாதி கொடுத்துவிடுவதாகச் சொன்னான்.

இரண்டாவது வாயில் காவலனும் அவனை உள்ளே போக அனுமதித்தான்.

அரண்மனைக்குள் சென்ற இராமன் ஒருவரும் அறியாதவாறு பின்புற வழியாக நாடகம் நடக்கும் மேடைக்குள் நுழைந்து விட்டான்.

நடிகர்கள் வேடம் போட்டுக்கொண்டு கிருஷ்ண லீலா நாடகத்தை நடித்துக் கொண்டிருந்தனர்.

சபையோர் மிகுந்த ஆர்வத்துடன் நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

இச்சமயத்தில் நாடக மேடைக்குள் நுழைந்த தெனாலி இராமன் ஒரு தடியினால் கிருஷ்ணன் வேடம் போட்டுக் கொண்டிருந்தவனை நையப்புடைக்க ஆரம்பித்தான்.

கிருஷ்ணன் வேடம் போட்டவனோ குய்யோ முறையோ என்று கத்திக் கொண்டே உள்ளே ஓடிவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம் பாதியில் நிறுத்தப்பட்டுத் திரை விடப் பட்டது.

நாடகம் நடந்து கொண்டிருக்கும்போது சுவையான கட்டத்தில், இடையில் புகுந்து குழப்பம் விளைவித்ததற்காக தெனாலி இராமனின் மீது கோபம் கொண்டார் இராயர்.

காவலர்களை விட்டு இராமனை இழுத்து வரச் சொன்னார்.

தெனாலி இராமன் வந்ததும் "என்ன இது கலாட்டா? எதற்காக கிருஷ்ணன் வேடம் போட்டவனை அடித்தாய்? என்று கேட்டார், இராயர்.

"அரசே, கிருஷ்ணன் செய்யும் துடுக்குத்தனங்கள் தாளாது கோபிகா ஸ்திரீகள் அவனை மத்தினால் மொத்து மொத்து என்று மொத்தியிருக்கின்றனர். இவ்வளவு அடிகளையும் வாங்கிக் கொண்டு பேசாமல் இருந்த கண்ணன் நான் ஒரு சிறு தடியினால் சில அடிகள் அடித்ததற்கே இந்தக் கூப்பாடு போட்டாரே!" என்றான் இராமன்.

இராமன் சொன்னதைக் கேட்டதும் சபையிலிருந்தவர்கள் சிரித்து விட்டனர். ஆயினும் இராயரின் கோபம் தணியவில்லை.

"அனுமதியின்றி உள்ளே நுழைந்தது ஒரு குற்றம். நாடக நடிகரைத் தாக்கிக் குழப்பம் விளைவித்தது இரண்டாவது குற்றம். எனவே ஒவ்வொரு குற்றத்திற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பது கசையடிகள் தரவேண்டுமென்று உத்தர விடுகிறேன்" என்றார், இராயர்.

தண்டனையை நிறைவேற்ற காவலர்கள் இராமனிடம் நெருங்கினார்கள்.

"சற்று பொறுங்கள், எனக்குக் கிடைப்பதில் ஆளுக்குப் பாதி தருவதாக இரண்டு பேருக்கு ஏற்கனவே வாக்குறுதி அளித்திருக்கிறேன். அவர்கள் இரண்டு பேருக்கும் ஆளுக்கு ஐம்பது கசையடிகள் கொடுத்து விடுங்கள்" என்று கூறிய இராமன், காவலர்களை வாயிற் காவலர்களிடம் அழைத்துச் சென்றான்.

## 18. சோதிடம் பொய்!


**அ**ண்டைநாட்டு மன்னனான பீஜப்பூர் சுல்தான் இராயருக்குப் பலவகைகளில் தொந்தரவு கொடுத்து வந்தான். அவன் மேல் படையெடுத்து அவன் கொட்டத்தை அடக்க வேண்டுமென்று இராயர் தீர்மானித்தார்.

பீஜப்பூரின் மேல் படையெடுப்பதற்காக வேண்டிய பெரிய படையைத் திரட்டினார். படை எடுப்பதற்கான நாளும் குறித்தாகிவிட்டது.

இதைப் பீஜப்பூரின் மேல் படையெடுப்பதற்காக வேண்டி பெரிய படையைத் திரட்டினார். படை எடுப்பதற்கான நாளும் குறித்தாகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைப் பீஜப்பூர் சுல்தான் கேள்விப்பட்டான். இராயரின் படைக்கு முன்னால் தான் நிற்க முடியாது என்று அஞ்சினான். இன்னும் ஒரு வருடம் காலம் இராயரின் படையெடுப்பு இல்லாமலிருந்தால் அதற்குள் ஒரு பெரும் படையை திரட்டி விடலாமென்று நினைத்தான்.

எப்படியாவது இராயர் தன் படையெடுப்பை இன்னும் ஒரு வருட காலத்திற்கு ஒத்தி வைத்துவிட வேண்டுமென்று நினைத்தான். அதற்காகத் தன் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஓர் ஒற்றனிடம் ஏதாவது சூழ்ச்சிகள் செய்து இராயரின் படையெடுப்பை நிறுத்தி விடுமாறு கூறி அவனுக்கு ஆயிரம் பொன் கொடுத்தான்.

பீஜப்பூர் சுல்தானின் ஒற்றன் ஒரு சோதிடனைப் போல் வேடம் தரித்துக் கொண்டான். இராயரின் அரசவைக்குச் சென்றான்.

"அரசே, தாங்கள் பீஜப்பூர் சுல்தான் பேரில் படையெடுக்கப் போவதாகக் கேள்விப்பட்டேன். இன்னும் ஓராண்டு காலத்திற்குத் தங்களுடைய ஜாதகப்படி கெடுதலான பலன்களே சம்பவிக்கும். இச்சமயத்தில் தாங்கள் படையெடுத்தால் தங்களுக்குத் தோல்வியே கிடைக்கும்" என்று இராயரிடம் கூறினான், சோதிடன் வேடம் பூண்டு வந்திருந்த ஒற்றன்.

"எல்லா ஏற்பாடுகளும் செய்தாகி விட்டது. இப்பொழுது எப்படி உங்கள் பேச்சுப்படி படையெடுப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்த முடியும்? நீங்கள் சொல்வது உண்மையில்லை என்று எவராலும் நிரூபித்தால் அவர்களுக்குத் தக்க பரிசுகள் அளிப்பேன்" என்றார் இராயர்.

ஒருமுறை சூடுகண்ட தெனாலி இராமனுக்கு அயல் நாட்டவர் யாரைப் பார்த்தாலும் சந்தேகமாக இருந்தது. சோதிடன் சொல்வது பொய்யாக இருக்குமோ என்று நினைத்தான்.

உடனே சோதிடனைப் பார்த்து, "சோதிடரே எங்கள் அரசருடைய ஜாதகத்தை எப்படியோ கஷ்டப்பட்டுத் தேடிக் கண்டுபிடித்துப் பலனைச் சொல்லிவிட்டீர்கள். உங்கள் ஜாதகப்படி உங்களுக்கு ஆயுட்காலம் எவ்வளவு என்று உங்களால் சொல்ல முடியுமா?" என்று சோதிடர் வேடம் பூண்டு வந்திருந்த ஒற்றனைப் பார்த்துக் கேட்டான், தெனாலி இராமன்.

என்னுடைய ஜாதகம் எனக்கு மனப்பாடம், இன்னும் முப்பது ஆண்டுகளுக்குக் குறையாமல் நான் உயிர் வாழ்ந்திருப்பேன் என்றான் ஒற்றன்.

உடனே தெனலி இராமன் சற்றும், தாமதியாமல் பக்கத்திலிருந்த காவலன் ஒருவன் உடைவாளை உருவி அவனை ஒரே வெட்டாக வெட்டி விட்டான். இராமனின் செய்கையைக் கண்டு ஒரு கண நேரம் அனைவரும் திகைத்துவிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“”அரசே, இவன் ஒரு போலி சோதிடன் என்பது இப்போது நிரூபணமாகி விட்டதல்லவா? உண்மையான சோதிடனாக இருந்தால் தனக்கு இப்பொழுது மரண காலம் என்பதை உணர்ந்திருக்க மாட்டானா? எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. இவன் பகைவனின் ஒற்றனாக இருக்கக்கூடும். நீங்கள் எதற்கும் தயங்காமல் பீஜப்புரின் மெல் படையெடுக்கலாம்” என்றான் இராமன்.

இராயரும் துங்கபத்திரை ஆற்றைக் கடந்து தமது பெரும்படையுடன் பீஜப்பூர் சென்றார். பீஜப்பூர் மன்னனை வென்று வெற்றி வாகையுடன் விஜயநகரம் திரும்பினார்.

“இவ்வளவுக்கும் தெனாலி இராமனின் சமயோசித புத்தியே காரணம்” என்று இராமனைப் புகழ்ந்த இராயர் அவனுக்குப் பல பரிசுகள் அளித்துப் பாராட்டினார்.


## 19. மற்றவை கற்பனையில்!

கிருஷ்ணதேவராயர் கலையார்வம் மிக்கவர். ஓவியம், சிற்பம் முதலியவைகளில் அதிக ஈடுபாடு உடையவர். தம்முடைய அரண்மனையில் ஒருபுறத்தில் ஓர் அழகிய கலைக்கூடம் அமைக்க எண்ணினார். அதில் ஒப்புயர்வற்ற சித்திரங்களையும் சிற்பங்களையும் வைக்க எண்ணினார்.

கலைக்கூடம் தலைசிறந்த சிற்பிகளால் அழகிய முறையில் கட்டப்பட்டது. சுவர்களில், சிறந்த ஓவியர்களைக் கொண்டு அழகிய காட்சிகளை வரைய நினைத்தார் இராயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்காக வடநாட்டிலிருந்து புகழ்பெற்ற ஓவியர்களை வரவழைத்தார். கலைக்கூடத்தின் சுவர்களில் ஓவியர்கள் தங்கள் திறமைகளையெல்லாம் காட்டி வண்ண ஓவியங்களை வரைந்தனர்.

ஓவிய வேலை முற்றுப்பெற்றதும் அவற்றை பார்வையிடுவதற்காக இராயர் கலைக்கூடத்துக்குச் சென்றார். அவருடன் தெனாலி இராமனும் சென்றான்.

இராயர் ஒவ்வொரு ஓவியத்தையும் கூர்ந்து பார்த்தார். ஒவ்வொன்றும் அற்புதமாக இருந்தது. ஓவியங்களை இராயர் மிகவும் ரசித்தார். அவைகளைப் பற்றிப் பாராட்டிப் பேசினார்.

அப்பொழுது அவருடன் இருந்த தெனாலி இராமன், "அரைகுறையாக ஓவியம் வரைந்திருக்கிறார்கள். இதைப் போய் இப்படிப் பாராட்டுகிறீர்களே!" என்று இராயரிடம் கூறினான்.

"அரைகுறை ஓவியமா? ஓவியத்தைப் பற்றி உனக்கென்ன தெரியும்?" என்று இராமனைப் பார்த்துக் கேட்டார், இராயர்.

"அரசே, ஒவ்வொரு ஓவியத்திலும் முகம் தெரிந்தால் முதுகு தெரிய மாட்டேனென்கிறது. முதுகு தெரிந்தால் முகம் தெரிய மாட்டேனென்கிறது. இப்படி அரைகுறையாக இருப்பதை அரைகுறை ஓவியம் என்று ஏன் சொல்லக் கூடாது?" என்றான் இராமன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உனக்குக் கலையறிவு துளிகூடக் கிடையாது. தெரியாத பாகங்களை நாம் கற்பனைக் கண்ணால் பார்த்துக் கொள்ள வேண்டும்" என்றார், இராயர்.

சில நாட்கள் சென்றன.

இராமன் ஒருநாள் இராயரிடம் வந்தான்.

"அரசே, என்னை மிகவும் கேவலமாகக் கூறி விட்டீர்கள். அதற்காகவே ஒரு பெரிய சித்திரக்காரரிடம் ஓவியம் வரையப் பழகிக் கொண்டேன். எனக்கு அனுமதி கொடுத்தால் நானும் என் கைத்திறமையைக் கலைக்கூடச் சுவர்களில் காட்டுவேன்" என்றான் இராமன்.

" நீ காவியம் மட்டும் தான் தீட்டுவாய் என்று நினைத்திருந்தேன் ஓவியமும் தீட்டக் கற்றுக் கொண்டிருப்பதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். உன்னுடைய ஓவியத் திறமையைக் கலைக்கூடச் சுவர்களில் காட்டு" என்றார் இராயர்.

மறுநாள் இராமன் கலைக்கூடத்திற்குச் சென்றான். வடநாட்டு ஓவியர்கள் வரைந்திருந்த ஓவியங்களையெல்லாம் அழித்துவிட்டான். பிறகு சுவரில் மனம் போனவாறு கை, கால், முகம், வாய், கண் என்று தனித்தனியாக வரைந்து தள்ளிவிட்டான்.

சுவர்களில் கன்னாபின்னாவென்று ஓவியங்களை வரைந்த இராமன் இராயரை அழைத்து வந்து காண்பித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமனின் ஓவியத்தைக் கண்ட இராயருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

"இது என்ன மூடத்தனமான செய்கை? இப்படித் தனித்தனி அவயவங்களாகப் போட்டிருக்கிறாயே!" என்று கோபமாகக் கேட்டார் இராயர்.

"அரசே, நீங்கள் கூட இப்படி இருப்பீர்களென்று நான் நினைக்கவில்லை. இல்லாத பாகங்களைக் கற்பனைக் கண்ணினால் பார்த்துக் கொள்ள வேண்டாமா?" என்றான் இராமன்.

கோபம் கொண்ட இராயர் தெனாலி இராமனைப் பார்த்து, "வரவர உன் செய்கை எனக்குப் பிடிக்கவே இல்லை! இனி என் முன்னால் உன் முகத்தைக் காட்டினாயோ உன்னைக் கொன்று விடுவேன்" என்றார்.


## 20. பானைத் தலையன்!

**அ**ரசர் இராமனை இனி முகத்தில் விழிக்காதே என்று கூறிவிட்டது தாத்தாச்சாரியாருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது.

அன்றை தினம் அரசரின் பிறந்த தினவிழா, அரண்மனையே கோலாகலமாக இருந்தது. தெனாலி இராமனின் பேரில் இருந்த கோபம் இராயருக்கு அடங்கவில்லை. கலைக்கூட சம்பவத்திற்குப் பின்னர் தெனாலி இராமனும் இராயரைச் சந்திக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரண்மனைத் தோட்டத்தில் விருந்தும் கேளிக்கையு மாக இருந்தது. திடீரென்று விருந்தினர்களிடையே ஒரு சலசலப்பு ஏற்பட்டது. யாரோ ஒருவன் தலையில் பானையைக் கவிழ்த்துக் கொண்டு விருந்து மண்டபத்தை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

பார்வை தெரிவதற்காகப் பானையில் இரு ஓட்டை கள் செய்திருந்தான். அவன் இராயரை நோக்கி வந்து கொண்டிருந்தான். தலையில் பானை கவிழ்த்திருந்ததால் அது யார் என்று ஒருவருக்கும் புரியவில்லை.

பானைத் தலையனைப் பார்த்ததும் இராயருக்கு ஒருபுறம் வேடிக்கையாகவும், மறுபுறம் ஆத்திரமாகவும் இருந்தது. "யார் இந்த கோமாளி" சிவபூஜையில் கரடி புகுந்த மாதிரி" என்று நினைத்தார்.

பானைத் தலையன் நேரே அரசரிடம் சென்று, "அரசே, தங்களுக்கு என் பிறந்த தின வாழ்த்துக்கள் இன் னும் பல்லாண்டுகள் நீங்கள் சீரும் சிறப்புமாக வாழ வேண்டுமென்று கடவுளை வேண்டிக் கொள்கிறேன்" என்றான்.

அவன் குரலிலிருந்து தெனாலி இராமன்தான் அவன் என்று தெரிந்து கொண்டார் அரசர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இராமா, இது என்ன வேடிக்கை! பானையைத் தலையில் கவிழ்த்துக் கொண்டு கோமாளி மாதிரி. முதலில் பானையை எடு" என்றார் இராயர்.

"அரசே தாங்கள் தான் என் முகத்தைத் தங்க ளுக்குக் காட்டக் கூடாது என்று உத்தரவிட்டீர்கள். தங்கள் உத்தரவுப் படி நடக்க வேண்டுமென்பதற்காகத்தான் இம்மாதிரி வந்தேன்" என்றான் இராமன்.

சரி, சரி சொன்னதைத் திரும்பப் பெற்றுக் கொள் கிறேன். முதலில் தலையிலிருந்து பானையை எடு" என்றார் இராயர்.

## 21. கிளியின் தெய்வ பக்தி!

**போ**ர்த்துகீஸ் நாட்டிலிருந்து வந்த வணிகன் ஒருவன் அழகிய கிளி ஒன்றை கிருஷ்ண தேவராயருக்குப் பரிசாக அளித்தான்.


கிளியின் அழகைக் கண்டு மயங்கிய இராயர் ஒரு தங்கக் கூண்டில் அதனை அடைத்து வைக்குமாறு உத்தர விட்டார்.

வேளாவேளைக்குக் கிளிக்குப் பாலும் பழமும் ஆகாரமாகத் தரப்பட்டன.

கிளி நன்றாகக் கொழுத்து வளர்ந்தது. அது போர்த் துகீசியன் கற்றுக் கொடுத்த சில வார்த்தைகளைச் சொல்ல ஆரம்பித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராயருக்குக் கிளி என்ன சொல்கிறதென்றே புரியவில்லை. தம்முடைய பாஷையில் அதற்குச் சில சொற்களைக் கற்பிக்க நினைத்தார் இராயர். அந்தச் சில சொற்கள் கூட கடவுள் பெயராக இருந்தால் நல்லது என்று கருதினார். எனவே அவர் கிளிக்கு, "ராமா கிருஷ்ணா! என்று சொல்லித் தரலானார்.

கிளியும் இராயர் சொல்லிக் கொடுத்த வார்த்தைகளைக் கற்றுக் கொண்டது.

இப்பொழுது கிளி அடிக்கடி "இராமா கிருஷ்ணா!" என்று சொல்லிக் கொண்டிருந்தது.

ஒருநாள் இராமன் இராயரைப் பார்க்க வந்தபோது கிளி, "ராமா, கிருஷ்ணா" என்று சொல்லியது.

தன்னைத்தான் கிளி அழைக்கிறது என்று தெனாலிராமன் (தெனாலி ராமகிருஷ்ணன்) திரும்பிப் பார்த்தான்.

"அது உன்னைக் கூப்பிடவில்லை. கடவுள் பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கிறது. கிளிக்கு இருக்கும் தெய்வபக்திகூட மனிதர்களுக்கு இல்லையே என்பதை நினைக்கும் போது வருத்தமாக இருக்கிறது" என்றார், இராயர்.

"அரசே, ஆறு அறிவுள்ள மனிதர்களால்தான் பக்திமானாகவோ, பக்தியற்ற நாத்திகனாகவோ இருக்க முடியும். ஆனால், ஐந்து அறிவுள்ள கிளிக்குத் தெய்வபக்தி இருக்கிறது என்பது அதிசயம். அது தெய்வ பக்தியினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் பெயரைச் சொல்லவில்லை. நீங்கள் கொடுக்கும் இனிப்புப் பண்டங்களுக்காகத்தான் அது அப்படிச் சொல் கிறது" என்றான், இராமன்.

"இதை உன்னால் நிரூபித்துக் காட்ட முடியுமா?" என்றார், இராயர்.

இப்பொழுதே நிரூபித்துக் காட்டுகிறேன்" என்று சொல்லிய இராமன் எங்கிருந்தோ ஒரு பூனையைக் கொண்டு வந்தான். கிளிக் கூண்டின் அருகே அதை வைத்தான்.

பூனை கிளியைப் பார்த்ததும் "மியாவ், மியாவ்!" என்று கத்தியது.

கிளியோ, "கீச், கீச்" என்று கத்தியது.

இராயர் கிளிக்குப் பக்கத்திலிருந்து கொண்டு "ராமா! கிருஷ்ணா! என்று சொல்" என்று பல தடவை கிளியிடம் சொல்லிப் பார்த்து விட்டார்.

இராயர் சொன்னதை அது காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. கீச் கீச் என்று கத்திக் கொண்டி ருந்தது.

"இத்தனைக்கும் உங்கள் கிளி கூண்டுக்குள் தான் இருக்கிறது. அதற்குப் பூனையால் எந்தவிதமான ஆபத்தும் ஏற்படாது. அப்படியிருந்தும் கூடப் பூனையைப் பார்த்ததும் கீச் கீச் என்று தான் கத்துகிறதே தவிர "ராமா கிருஷ்ணா!" என்று சொல்லவில்லையே!" என்றான், இராமன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22. குதிரை தூக்க முடியாத எடை

**ஒ**ருமுறை கிருஷ்ணதேவராயர் தம்முடைய அரபுக் குதிரையில் ஏறிச் சவாரி செய்து கொண்டிருந்தார்.

அப்பொழுது அங்கே வந்த தெனாலி இராமன் தான் ஒருமுறை அந்தக் குதிரை மீது ஏறிச் சவாரி செய்ய வேண்டுமென்று இராயரிடம் கூறினான்.

"இது என்ன உன்னுடைய நோஞ்சான் குதிரை என்று நினைத்துக் கொண்டாயா?" என்றார் இராயர்.

"குதிரை மேல் ஏறிப் பார்த்தால் உங்கள் குதிரை நோஞ்சானா நான் நோஞ்சானா என்று தெரிந்துவிடும்" என்றான் இராமன்.


"சரி, சரி, உன் விருப்பத்தைக் கெடுப்பானேன்?" என்று கூறிய இராயர் தம்முடைய குதிரையிலிருந்து கீழே இறங்கினார்.

இராமன் குதிரை மீது ஏறி உட்கார்ந்து கொண்டான். மறுகணம் அந்தக் குதிரை உடம்பை ஒரு சிலிர்ப்புச் சிலிர்த்து இராமனைக் குப்புறத் தள்ளி விட்டது.

இதைப் பார்த்த இராயர் "கடகட" வென்று சிரித்த வாறே, "நான் அப்பொழுதே சொன்னேனே, கேட்டாயா?" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதுகில் பட்டிருந்த தூசியைத் தட்டியவாறே எழுந்த இராமன், "உங்கள் குதிரை தான் நோஞ்சான் என்று நிரூபணமாகிவிட்டது, என்னுடைய பளுவைத் தாளமுடியாமல் என்னை அது தள்ளிவிட்டது!" என்றான்.

"என்ன இருந்தாலும் நீ பேச்சில் சமர்த்தன் தான்!" என்று கூறிய இராயர் சிரித்தார்.

## 23. கத்தரிக்காய் திருடன்!

**தெ**ன் கன்னட நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட கத்தரிச் செடிகள் சிலவற்றை இராயர் தமது தோட்டத்தில் பயிரிட்டிருந்தார்.

அந்தச் செடிகள் வளர்ந்து காய்த்துக் குலுங்கின. அவற்றைப் பறித்துச் சமையல் செய்து சாப்பிட்ட இராயர் அதன் ருசியைப் புகழ்ந்தார். வேறு எவரும் அந்தக் கத்தரிச் செடியிலிருந்து காய்களைப் பறிக்கலாகாது என்று உத்தரவிட்டிருந்தார்.

யாராவது தவறிப் போய் அந்தச் செடிகளிலிருந்து கத்தரிக்காய் பறித்தது தெரியவந்தால் அவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்படுமென்றும் கூறினார்.

தெனாலி இராமன் ஒருமுறை அரண்மனைக்குச் சென்றபோது இராயருடன் அவன் சாப்பிடவேண்டி நேரிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது கத்தரிக்காய்க் கறி பரிமாறினார்கள். அதை ருசித்துச் சாப்பிட்டான் தெனாலி இராமன். வீட்டுக்கு வந்ததும் அரண்மனைக் கத்தரிக்காயைப் பற்றி வானளாவப் புகழ்ந்தான். தன் ஆயுளில் அம்மாதிரியான ஒரு கத்தரிக் காய்க் கறி சாப்பிட்டதே இல்லை என்று தன் மனைவியிடம் கூறினான்.

அவன் கூறியதைக் கேட்ட அவன் மனைவி "நீங்கள் மட்டும் சாப்பிட்டுவிட்டு வந்தால் எப்படி? எனக்கும் சிறிது கறி கொண்டு வரலாகாதா?" என்று இராமனிடம் கேட்டாள்.

"சுத்த பைத்தியமாக இருக்கிறாயே! அரண்மனை யிலிருந்து கத்தரிக்காய் கறி உனக்காக எடுத்து வரமுடி யுமா?" என்று கேட்டான், இராமன்.

"அப்படினால் அரண்மனைத் தோட்டத்திலிருந்து கொஞ்சம் கத்தரிக்காய்களைக் கொண்டு வந்து விடுங்கள். நான் கறியாகச் சமைத்து விடுகிறேன்" என்றாள் இராமனின் மனைவி.

மனைவி சொல்லைத் தட்டமுடியாத இராமன், அன்று பொழுது சாய்ந்தபின் எவரும் காணாதவாறு அரண் மனைத் தோட்டத்திற்குச் சென்றான். கத்தரிச்செடியில் சில கத்தரிக் காய்களைப் பறித்து மடியில் கட்டிக் கொண்டான். போன மாதிரியே எவருக்கும் தெரியாமல் வீட்டுக்குத் திரும்பி வந்து விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமன் கொண்டுவந்து கொடுத்த கத்தரிக்காயைச் சமைத்தாள் இராமனின் மனைவி. கத்தரிக்காய்க் கறியைச் சாப்பிட்டதும் சுவையாக இருந்ததை அவள் உணர்ந்தாள்.

"இவ்வளவு சுவையான கறியை நாம் மட்டும் சாப்பிட்டால் எப்படி? வெளியே திண்ணையில் படுத்திருக்கும் நமது மகனுக்கும் கொஞ்சம் தரலாமே!" என்றாள், இராமனின் மனைவி.

"சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி என்கிற பழமொழிப்படி நாளைக் காலையில் நம் வீட்டில் கத்தரிக்காய்க் கறி சமைத்த சமாசாரம் அவன் மூலம் ஊர் பூராவும் பரவிவிடும். பேசாமல் இரு" என்றான் இராமன்.

இராமனின் மனைவிக்குத் தாய்ப்பாசம் விடவில்லை. எப்படியாவது மகனை எழுப்பிச் சிறிதளவாவது சோற்றில் கத்தரிக் காய்க் குழம்பு போட்டுச் சாப்பிட வைத்துவிட வேண்டுமென்று விரும்பினாள்.

தெனாலி இராமனிடம் பையனைக் கூட்டிக் கொண்டு வரச் சொல்லி நச்சரித்துவிட்டாள்.

மனைவியின் தொந்தரவு பொறுக்க முடியாமல் இராமன் வெளியே வந்தான். வரும்போது ஒரு செம்பில் தண்ணீர் கொண்டு வந்தான். திண்ணையருகே வந்ததும் செம்பிலிருந்த தண்ணீரை அவன் மீது தெளித்து, "மழை பெய்கிறது உள்ளே எழுந்து வா" என்று மகனை எழுப்பினான் தெனாலி இராமன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெனாலி இராமனின் மகன் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தான்.

உள்ளே சென்றதும் அவனது ஈர உடைகளைக் களைந்து வேறு உடைகளை அவனுக்கு உடுத்தி விட்டான். பின்னர் அவனைச் சமையலறைக்குக் கூட்டிச் சென்றான்.

இராமனின் மனைவியும் தன் அருமை மகனுக்கு இலையில் சோறு போட்டுக் கத்தரிக்காய்க் குழம்பை ஊற்றினாள்.

பையனும் ஆர்வமாக சாப்பிட்டான். பின்னர் அவன் கையையும், வாயையும் அலம்பி அவனைப் படுக்கையில் படுக்க வைத்துவிட்டான் இராமன்.

மறுநாள் தோட்டத்திற்குச் சென்ற காவல்காரன் கத்தரிச் செடிகளிலிருந்து சில கத்தரிக்காய்கள் திருட்டுப் போய்விட்டதை அறிந்து கொண்டான். உடனே இராயரிடம் வந்து, “அரசே நேற்று இரவு யாரோ ஒருவர் தமது தோட்டத்திற்குள் புகுந்து கத்தரிச் செடியிலிருந்து சில கத்தரிக்காய்களைப் பறித்து சென்றுவிட்டனர்” என்றான்.

நம்முடைய தோட்டத்திலேயே களவுபோய் விட்டது இராயருக்கு ஆத்திரத்தைக் கிளப்பியது. அமைச்சர் அப்பாஜியிடம் சொல்லி அந்தத் திருடன் யாராக இருந்தாலும் உடனே என்முன் கொண்டு வந்து நிறுத்த வேண்டும் என்றார் இராயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாஜிக்குத் தெனாலி இராமனின் பேரில் சந்தேகம். தக்க சாட்சியம் இல்லாமல் அவனை எப்படிக் கைது செய்ய முடியும் என்று நினைத்த அப்பாஜி, காவலர்களை அனுப்பித் தெனாலி இராமனையும் அவன் மகனையும் கூட்டிவரச் சொன்னார்.

அரண்மனைக் காவலர்கள் தெனாலி இராமனையும், அவன் மகனையும் கூட்டிச் சென்றதும் இராமனின் மனைவி மிகவும் வருந்தினாள்.

"நம்மால் தானே இந்த நிலை ஏற்பட்டது, பெண் புத்தி பின்புத்தி என்பார்களே! அது சரியாகப் போய் விட்டதே! கடவுளே நீதான் என் கணவரைக் காப்பாற்ற வேண்டும்" என்று கடவுளை வேண்டிக் கொண்டாள்.

அரசவைக்கு வந்த தெனாலி இராமனின் மகனைப் பார்த்து அப்பாஜி "நேற்றிரவு உன் வீட்டில் என்ன குழம்பு வைத்தார்கள்?" என்று கேட்டார்.

"கத்தரிக்காய்க் குழம்பு" என்றான் தெனாலி இராமனின் மகன்.

அப்பாஜி தெனாலி இராமனை ஒரு பார்வை பார்த்தார் உடனே,

"அமைச்சரே, அவன் காலையிலிருந்து இப்படித் தான் பிதற்றிக் கொண்டிருக்கிறான். இது மட்டுமல்ல, நேற்று இரவு மழை பெய்தது என்று வேறு சொல்கிறான். ஒருவேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கத்தில் கனவு கண்டிருப்பான் போலிருக்கிறது" என்றான் இராமன்.

"நேற்றிரவு மழை பெய்ததா?" என்று அப்பாஜி சிறுவனைப் பார்த்துக் கேட்டார்.

"ஆமாம், நேற்று இரவு நல்ல மழை. திண்ணையில் தூங்கிக் கொண்டிருந்த என்னை என் அப்பா தான் எழுப்பி உள்ளே கூட்டிச் சென்றார்" என்றான் சிறுவன்.

முன் தினம் மழையே பெய்யவில்லையாகையினால் சிறுவன் கனவுதான் கண்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு இராயரும் அப்பாஜியும் வந்தனர்.

தன் புத்திசாதுரியத்தினால் தெனாலி இராமன் தண்டனையிலிருந்து தப்பினான்.

## 24. மைத்துனனைக் காப்பாற்றுதல்!

தெனாலி இராமனின் மைத்துனன் ஒருவன் கிராமத்தில் இருந்தான். நெடுநாளாக அவனுக்கு விஜயநகரம் வந்து அக்காவின் வீட்டில் தங்கியிருக்க வேண்டுமென்ற ஆவல்.

ஒருநாள் கிராமத்திலிருந்து புறப்பட்டு விஜயநகரம் வந்துவிட்டான். வந்தவனைத் தெனாலி இராமனின் மனைவி இன்முகத்துடன் வரவேற்றாள். நீண்ட நாட்களாகப் பார்க்காதிருந்த தன் தம்பியைப் பார்த்ததில் அவளுக்கு அளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த மகிழ்ச்சி. அவனுக்கு நாள்தோறும் விதவிதமான சமையல் செய்து விருந்துகள் படைத்தாள்.

ஒருநாள் தெனாலி இராமன் அரசவைக்குக் செல்லும்போது தானும் அவனுடன் வருவதாகக் கூறினான். தெனாலி இராமனின் மைத்துனன்.

"இன்றைய தினம் அரச சபையில் முக்கியமான விவாதம் ஒன்று இருக்கிறது. இன்னொரு நாளைக்குக் கூட்டிச் சென்று உனக்கு அரண்மனை முழுவதையும் சுற்றிக் காண்பிக்கிறேன்" என்றான், தெனாலி இராமன்.

"உங்களுக்குத் தினந்தோறும் அரசவையில் ஏதாவது வேலை இருந்து கொண்டு தான் இருக்கும். என் தம்பி இங்கு வந்து எத்தனை நாட்கள் ஆயிற்று. ஒரு நாளாவது நீங்கள் அவனை அரண்மனைக்குக் கூட்டிச் சென்றீர்களா?" என்றாள் தெனாலி இராமனின் மனைவி.

"சரி, சரி நீ ஒன்றும் மூக்கால் அழாதே! உன் தம்பியைக் கூட்டிப் போகிறேன்" என்று சொல்லிவிட்டுத் தன் மைத்துனனையும் அரண்மனைக்குக் கூட்டிச் சென்றான் தெனாலி இராமன்.

தனியாக இருந்த தெனாலி இராமனின் மைத்துனன் கொஞ்ச நேரம் கழித்துத் தானே சென்று ஒவ்வொரு இடமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். இவ்வாறு ஒவ்வொரு இடமாகப் பார்த்துக் கொண்டே போனவன் அரண்மனைத் தோட்டத்திற்குச் சென்றுவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரண்மனைத் தோட்டத்தில் மாங்கனிகளும் சீதாப் பழங்களும் பழுத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன. இதை தவிர போர்த்துகல் நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட மரங்களிலும் பழங்கள் பழுத்துத் தொங்கிக் கொண்டிருந்தன. இந்த மரத்தில் பழுக்கும் பழங்களை எவரும் பறிக்கக் கூடாது என்பது மன்னர் உத்தரவு. மீறி எவராவது பறித்தால் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என்று மன்னர் ஆணையிட்டிருந்தார்.

இது தெனாலி இராமனின் மைத்துனனுக்குத் தெரியாது.

அரசர் உண்பதற்கான பிரத்தியேக மரங்களில் பழுத்துத் தொங்கிக் கொண்டிருந்த கனிகளைப் பறித்து ஆவலுடன் சாப்பிடலானான்.

இச்சமயத்தில் காவல்காரன் ஓடிவந்து அவனைக் கையும் களவுமாகப் பிடித்துவிட்டான். இராயரின் முன்னால் அவனைக் கொண்டு வந்து நிறுத்தினான்.

அப்பொழுது தெனாலி இராமனும் அரசருடன் இருந்தான்.

அவன் தெனாலி இராமனின் மைத்துனன் என்பதை அறிந்த இராயர், "தெனாலி இராமா உன் மைத்துனனைக் காப்பாற்ற என்ன முயற்சி செய்தாலும் இம்முறை என்னிடம் அது பலிக்காது. இந்த முறை நீ என்ன கேட்கப் போகிறாயோ, அதற்கு நேர்மாறாகத்தான் நடந்து கொள்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிலிருந்து இம்மியும் தவற மாட்டேன். இது சத்தியம்” என்றார், இராயர்.

அரசே மகா மூடனும் பிறர் பொருளைக் களவாடவும் துணிந்த இவனுக்கு மரண தண்டனை கொடுத்து விடுங்கள். அதுவே நான் விரும்புவது. ஆனால், நீங்கள் கொடுத்துள்ள வாக்குறுதியையும் தயவு செய்து நினைத்துப் பார்த்துக் கொள்ள வேண்டுகிறேன். நான் எது கேட்டாலும் அதற்கு நேர்மாறாகத்தான் நடந்து கொள்வேன் என்று சத்தியம் செய்திருக்கிறீர்கள் என்றான், இராமன்.

“மரண தண்டனைக்குப் பதில் அவனை நாடு கடத்தி விடுவோம். இனி ஒரு நிமிடம்கூட அவன் இந்த நாட்டில் இருக்கலாகாது!” என்று தீர்ப்பளித்தார் இராயர்.

தெனாலி இராமனின் மைத்துனனும் மூட்டையைக் கட்டிக் கொண்டு தன் ஊர் போய்ச் சேர்ந்து விட்டாள்.


## 25. டில்லியில் தெனாலி இராமன்!

**மொ**கலாயப் பேரரசரான பாபர் சக்கரவர்த்தி தெனாலி இராமனைப் பற்றிக் கேள்விப்பட்டார். அவனுடைய நகைச்சுவை ஆற்றலைக் குறித்துப் பலர் அவரிடம் கூறக் கேட்டார்.

தெனாலி இராமனைத் தனது சபைக்கு வரவழைத்துச் சோதனை செய்து பார்த்துவிட வேண்டுமென்று பாபர் விரும்பினார். அதன்படி இராயருக்கு ஒரு கடிதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதவே, இராயரும் தெனாலி இராமனை டில்லிக்கு அனுப்பி வைத்தார்.

தெனாலி இராமன் வருவதற்குமுன் பாபர் தன் சபையிலுள்ளவர்களுக்கு ஓர் எச்சரிக்கை விடுத்தார்.

"தென்னாட்டிலிருந்து வரும் தெனாலி இராமனை அவ்வளவு சுலபத்தில் எவரும் பாராட்டலாகாது. அவன் சபையில் எவ்வளவு வேடிக்கையாகப் பேசினாலும் ஒருவரும் சிரிக்கக் கூடாது. அவனைப் பாராட்டவும் கூடாது. மீறி எவராவது நடந்தால் அவர்கள் தலை துண்டிக்கப்படும்" என்றார், பாபர்.

தெனாலி இராமன் பாபரின் சபைக்கு வந்தான். தன்னுடைய திறமையையெல்லாம் உபயோகித்து எவ்வளவோ அகடவிகடங்கள் செய்து பார்த்து விட்டான். ஒருவர் கூட அவனுடைய விகடத்தை ரசிக்கவில்லை, சிரிக்கவும் இல்லை. எல்லோரும் உம்மணா மூஞ்சிகள் மாதிரி உட்கார்ந்திருந்தார்கள்.

தெனாலி இராமன் இதில் ஏதோ சூது இருக்கிறது என்று தீர்மானித்தவனாய், "இம்மாதிரி நடந்து கொண்டால் பாபரிடமிருந்து ஒரு சிறு பொன்முடிப்புக்கூட பரிசாக வாங்க முடியாது. இதற்கு வேறு வழியைக் கையாள வேண்டும்" என்று நினைத்துக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் ஒரு தொண்டு கிழவன் மாதிரி வேடம் புனைந்து கொண்டான். பாபர் வரும் வழியில் ஓரிடத்தில் பள்ளம் தோண்டிக் கொண்டிருக்கலானான்.

அவ்வழியாக வந்த பாபர் சக்கரவர்த்தி முதியவர் வேடத்திலிருந்த தெனாலி இராமனைப் பார்த்து, “ஐயா பெரியவரே! இந்தத் தள்ளாத வயதில் எதற்காகப் பள்ளம் தோண்டுகிறீர்கள்?” என்று கேட்டார்.

“ஐயா, ஒரு மாங்கொட்டையை நடப்போகிறேன்” என்றான் முதியவர் வேடத்திலிருந்த தெனாலி இராமன்.

“ஐயா, மாங்கொட்டை முளைத்து மாமரமாகிக் காய்த்துப் பழுக்கும்வரை உங்களால் உயிருடன் இருக்க முடியுமென்று நம்புகிறீர்களா?” என்று முதியவர் வேடத்திலிருந்த தெனாலி இராமனைப் பார்த்துக் கேட்டார், பாபர்.

“அரசே, என் முன்னோர்கள் நட்ட மரங்களில் காய்த்துப் பழுத்த பழங்களை நான் உண்டேன். அதுபோல் எனக்குப் பின்னால் வரும் சந்ததியினர் பழங்கள் சாப்பிட வேண்டாமா? அதற்காகத்தான் இக்கொட்டையை நடுகிறேன்.”

இதைக் கேட்டு மகிழ்ந்த பாபர் ஒரு பண முடிப்பைக் கொடுத்துப் பாராட்டினார்.

பணமுடிப்பை வாங்கிக் கொண்ட தெனாலி இராமன், “அரசே, மரம் நட்டவர்கள் எல்லோரும் மரம் வளர்ந்து காய்க்கும்போதுதான் பலனை அடைவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், நானோ கொட்டையை நட்டவுடனேயே பலனைப் பெற்றுவிட்டேன்" என்றான்.

இந்தப் பதிலும் பாபருக்கு மகிழ்ச்சியை அளித்தது. மீண்டும் ஒரு பணமுடிப்பை கொடுத்துப் பாராட்டினார்.

இரண்டாவது முடிப்பைப் பெற்றுக் கொண்ட இராமன், "ஐயா, மரங்கள் நட்டவரெல்லாம் ஆண்டுக்கு ஒரு முறைதான் பலனைப் பெறுவார்கள். ஆனால், நானோ மரத்தை நட்ட அன்றே இருமுறை பலனைப் பெற்று விட்டேன்" என்றான்.

இந்தப் பதிலைக் கேட்டு மகிழ்ந்த பாபர் மீண்டும் ஒரு பணமுடிப்பைத் தெனாலி இராமனுக்குக் கொடுத்து விட்டு, இனியும் இங்கிருந்தால் இவர் வாக்கு சாதுரியத்தாலேயே நம் செல்வங்கள் எல்லாவற்றையும் கவர்ந்து கொள்வார், என்று நினைத்தவாறே குதிரையைத் தட்டிவிட்டார்.

அப்பொழுது, "நில்லுங்கள் பேரரசே!" என்ற குரலைக் கேட்டுத் திரும்பிய பாபர் கிழவர் வேடத்திலிருந்த தெனாலி இராமன் வேடத்தைக் கலைத்துவிட்டு நிற்பதைக் கண்டார்.

அவனைக் கண்டதும் குதிரையிலிருந்து இறங்கி அவனைக் கட்டித்தழுவி மகிழ்ந்தார். பின்னர் அரண்மனைக்குக் கூட்டிச்சென்று விலை உயர்ந்த பல பரிசுகளைக் கொடுத்து அரச மரியாதையுடன் அவனை விஜய நகருக்கு திரும்ப அனுப்பினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26. "அரசர்களை நம்பாதே!"

"அரசர்கள் நிலையற்ற புத்தியுடையவர்கள். ஒருசமயம் சொன்னதை மறுசமயம் மறந்து விடுபவர்கள். ஏறுக்கு மாறாக நடந்து கொள்பவர்கள். இப்படிப்பட்டவர் களை நம்பக்கூடாது" என்று தன் மனைவியிடம் ஒருநாள் கூறினான், தெனாலி இராமன்.

"நம்முடைய அரசர் கூடவா இப்படியிருப்பார்?" என்று கேட்டாள் தெனாலி இராமனின் மனைவி.

"நம் அரசர்க்கு மட்டும் என்ன இரண்டு கொம்புகள் உள்ளனவா? அவரும் அப்படித்தான்" என்றான், தெனாலி இராமன்.

"நான் இதை நம்பமாட்டேன்" என்றாள் இராமனின் மனைவி.

"விரைவிலேயே உனக்கு இதை நான் நிரூபித்துக் காட்டுகிறேன்" என்றான் இராமன்.

மறுநாள் இராமன் வருத்தம் தோய்ந்த முகத்துடன் வருவதைக் கண்டார், இராயர்.

"விகடகவியே, உன்னுடைய சோகத்துக்குக் காரணம் என்ன? எல்லோருடைய சோகத்தையும் போக்கிச் சிரிக்க வைக்கும் ஆற்றல் படைத்துள்ள நீயே சோகத்துடன் இருந்தால் எப்படி?" என்று இராமனைப் பார்த்துக் கேட்டார், இராயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அரசே, என்னுடைய இதயத்தில் தீராத வலி ஏற்பட்டுள்ளது. அதற்கு வைத்தியம் செய்து கொள்வதற்காக ஒரு வைத்தியரிடம் சென்றேன். அவர் என்னைப் பரி சோதித்துப் பார்த்துவிட்டு, நோய் முற்றிப் போய்விட்டது. இதை மருந்தினால் இனிக் குணப்படுத்த முடியாது. இன்னும் எவ்வளவு நாட்கள் பிழைத்து இருந்தாலும் அதுவே இலாபம் என்று கூறிவிட்டார்” என்றான் இராமன்.

“நீ ஏன் இதை எனக்கு முதலே சொல்லவில்லை? சொல்லியிருந்தால் நம் அரண்மனை வைத்தி யரைக் கொண்டு உனக்குத் தக்க சிகிச்சைகள் செய்து உன் நோயைக் குணப்படுத்தியிருக்கலாமே!” என்றார், இராயர்.

“அரசே, இனி பேசி என்ன பயன்? வெள்ளம் தலைக்கு மேல் போய் விட்டது. இனி சாண் போனால் என்ன? முழம் போனால் என்ன? நான் இறப்பதைப் பற்றிக் கூடக் கவலைப்படவில்லை. எனக்குப் பிறகு என்னுடைய மனைவி மக்களை யார் காப்பாற்றுவார்கள்? அதுவும் தவிர தங்களிடம் நிறைய பரிசுகள் பெற்று அவற்றை ஒரு பெட்டியில் சேர்த்து வைத்திருக்கிறேன். திடீரென்று நான் இறந்து விட்டால் என் மனைவியை ஏமாற்றி யாராவது அப்பொருள்களை அபகரித்துக்கொள்ளக் கூடுமோ என்று அஞ்சுகிறேன்” என்றான் இராமன்.

“அதைப் பற்றித் துளிகூடக் கவலைப்படாதே! நான் உயிரோடு இருக்கும்வரை உன்னுடைய குடும்பத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவிதமான ஆபத்தும் வராது, இது உறுதி" என்றார் இராயர்.

ஒரு வாரம் கழிந்தது.

ஒருநாள் இராயர் அரசவையில் இருக்கும் போது தெனாலி இராமன் இறந்து விட்டதாகச் செய்தி வந்தது.

"ஐயோ, பாவம்! அவன் முடிவு ஏற்கனவே தெரிந்ததுதான்! ஆனால் இவ்வளவு விரைவில் இறந்து போய் விடுவானென்று நான் நினைக்கவில்லை" என்றார் இராயர்.

அப்பொழுது தாத்தாச்சாரியார் "அரசே தெனாலி இராமன் தங்களிடமிருந்து அளவற்ற செல்வத்தைப் பரிசாகப் பெற்று நம்முடைய கஜானாவையே காலி செய்து விட்டான். தங்களிடமிருந்து பெற்ற பரிசுகளை ஒரு பெட்டியில் வைத்துப் பத்திரமாகப் பாதுகாத்து வருவதாகச் சொன்னான். அவனுடைய மனைவிக்கும் குழந்தைகளுக்கும் அவ்வளவு செல்வம் எதற்கு? தாங்கள் அந்த சொத்துக் களைப் பறிமுதல் செய்துவிட்டு, அவனுடைய மனைவிக்கும் குழந்தைகளுக்கும் ஏதாவது உதவித் தொகை கொடுக் கலாம்" ன்றார்.

"அரசே, தாத்தாச்சாரியார் சொல்வது நியாயம் தான். நம்முடைய கஜானாவில் இருந்த செல்வத்தில் முக்கால்வாசிக்கு மேல் கரைந்துவிட்டது. அதுவுமின்றி அவனிடம் உள்ள பரிசுகள் அனைத்தும் நாம் கொடுத்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே! நமக்குத் தேவையானபோது நாம் கொடுத்த பொருளை நாம் திரும்ப எடுத்துக் கொள்வதில் எந்தவித மான தவறும் இல்லை" என்று மந்திரிகளில் ஒருவர் சொன்னார்.

இவ்வாறு எல்லோருடைய கருத்தும் தெனாலி இராமன் சேர்த்து வைத்துள்ள செல்வத்தைப் பறிமுதல் செய்ய வேண்டுமென்பதாகவே இருந்தது.

முடிவில் அரசரும் காவலர்களை அனுப்பித் தெனாலி இராமன் வீட்டிலுள்ள பெட்டியை எடுத்து வருமாறு கூறினார்.

நான்கு காவலர்கள் ஒரு பெரிய பெட்டியைத் தலையில் சுமந்து வந்து இராயரின் முன்னால் இறக்கினார்கள். பெட்டியுடன் தெனாலி இராமனின் மனைவியும் வந்தாள்.

அரசர் முன்னிலையில் பெட்டி திறக்கப்பட்டது. மறுகணம் அதற்குள் படுத்திருந்த தெனாலி இராமன் எழுந்து மனைவியைப் பார்த்து, "அரசர்களை நம்பக்கூடாது, அவர்கள் பேச்சையும் நம்பக்கூடாது என்று உன்னிடம் சொன்னேனே, சரியாகப் போய்விட்டதல்லவா?" என்று கூறினான்.

"நீ இறந்து போய்விட்டாய் என்று செய்தி வந்ததே" என்று இராமனைப் பார்த்துக் கேட்டார், இராயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரசே என்னிடமிருக்கும் ஏராளமான செல்வத்தை யும் என் மனைவி மக்களையும் யாரை நம்பி விட்டு விட்டுப் போவது? இந்தக் காலத்தில் எவருடைய பேச்சையும் நம்ப முடியவில்லை. எனவே தான் சாகாமல் பிழைத்துவிட்டேன்" என்றான் இராமன்.

இராயர் தமது செய்கைக்காக வெட்கித் தலை குனிந்தார்.

## 27. தெனாலி இராமனின் முடிவு!

**அ**ளவற்ற தனது சொத்துக்களையும் மனைவி மக்களையும் விட்டுப் பிரிய மனமில்லாத இராமன் ஒருநாள் இறந்தே போய்விட்டான்!

மரணத்தின் பிடியிலிருந்து எவரும் தப்ப முடியாது. இது இராமனுக்குத் தெரியும். இராமன் இராயரிடம் ஆடிய நாடகம் ஒரு வேடிக்கைக்காகத்தான். அவனுடைய அந்திமக் காலமும் ஒரு வேடிக்கையாகவே போய்விட்டது.

ஒருநாள் இராமன் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தபோது அவனை ஒரு நல்ல பாம்பு கடித்துவிட்டது, விஷம் தலைக்கேறி விட்டது. மரணத்தின் முகப்பு வாசலில் இருந்தான்.

கடைசி முறையாக இராயரைக் காணவேண்டு மென்ற ஆவல் அவனுக்கு ஏற்பட்டது. இராயருக்குச் செய்தி அனுப்பினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது இராயர் அரசாங்க அலுவலில் மூழ்கியிருந்தார். இதுவும் இராமனின் வேடிக்கைகளில் ஒன்று என்று அவர் அலட்சியமாக இருந்துவிட்டார்.


கடைசிவரை இராயர் வராதது கண்ட இராமன், "தவறு என் பேரில் தான். புலி வருகிறது புலி வருகிறது என்று கத்திய இடைச் சிறுவனின் எதிரே உண்மையான புலி வந்தபோது அவனை யாரும் காப்பாற்ற முடியாமல் போன கதை மாதிரி என் கதையும் ஆகிவிட்டது. என் மதிப்பிற்குரிய மன்னர் நான் சொல்வதை நம்ப மறுக்கிறார். உண்மையாகவே நான் இறந்துவிட்டேன் என்பதைக் கேள்விப்பட்டால் அவர் மிகவும் வருந்துவார்" என்று கூறியவாறே உயிர் நீத்தான்.

இராமன் சொல்லியவாறே உண்மையை அறிந்து கொண்ட இராயர், தெனாலி இராமனின் பிரிவுக்காக மிகவும் வருந்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அன்புக்குரியவர்களுக்கு
பரிசளியுங்கள்...



பெயர் :

முகவரி :


தொலைபேசி இல. :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்
41, கண்டி வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.
322, செட்டியார் தெரு, கொழும்பு-11 தொ.பே: +94 11 2334004
Email: australuxme@yahoo.com, Web:www.astraluxumie.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org